This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 9ஆம் வகுப்பு

**சிறப்பம்சங்கள்**

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளுக்கும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அனைத்து இயலுக்குரிய அலகு தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- காலாண்டுத் தேர்வு, அரையாண்டுத் தேர்வு – 2019 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- மாதிரி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

www.surabooks.com

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores

**2021-22 புதிய பதிப்பு**

**© வெளியீட்டாளர்கள்**

ISBN : **978-81-8449-560-7**

**குறியீட்டு எண் : SG58**

**எழுதி வழங்கியவர்**

**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

Our Guides for XI, XII Standard

- Sura's Tamil
- Sura's English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available Sigaram Thoduvom mini guide (EM/TM) for all Subjects.

**தலைமை அலுவலகம்:**

1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,

அண்ணா நகர், சென்னை-600 040.

☎ 91-44-4862 9977, 486 27755

81242 01000/ 81243 01000

வாட்ஸ்அப்: 8124201000

**e-mail :** orders@surabooks.com,

**website :** www.surabooks.com

## மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com

புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com

தொடர்புக்கு : 80562 94222 / 80562 15222

வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027

**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **சுராவின் தமிழ் உரைநூல்** ஆகும். புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 9ஆம் வகுப்பு – தமிழ் உரைநூல் –** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 9ஆம் வகுப்பு தேர்வுகளில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.
நலமே விளைக!

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பப்ளிகேஷன்ஸ்)

www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| | | மனப்பாடச் செய்யுள் | 1-4 | |
| 1. | மொழி<br>அமுதென்று பேர் | திராவிட மொழிக்குடும்பம் (உரைநடை)<br>தமிழோவியம் (செய்யுள்)<br>தமிழ்விடு தூது (செய்யுள்)<br>வளரும் செல்வம் (துணைப்பாடம்)<br>தொடர் இலக்கணம் (இலக்கணம்) | 5-43 | ஜூன் |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல்<br>உயிருக்கு வேர் | நீரின்றி அமையாது உலகு (உரைநடை)<br>பட்டமரம் (செய்யுள்)<br>பெரியபுராணம் (செய்யுள்)<br>புறநானூறு (செய்யுள்)<br>தண்ணீர் (துணைப்பாடம்)<br>துணைவினைகள் (இலக்கணம்) | 44-85 | ஜூன்<br>ஜூலை |
| 3. | பண்பாடு<br>உள்ளத்தின் சீர் | ஏறுதழுவுதல் (உரைநடை)<br>மணிமேகலை (செய்யுள்)<br>அகழாய்வுகள் (துணைப்பாடம்)<br>வல்லினம் மிகும் இடங்கள் (இலக்கணம்)<br>திருக்குறள் (வாழ்வியல்) | 86-125 | ஜூலை |
| 4. | அறிவியல், தொழில்நுட்பம்<br>எட்டுத்திக்கும் சென்றிடுவீர் | இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும் (உரைநடை)<br>ஓ, என் சமகாலத் தோழர்களே! உயிர்வகை (செய்யுள்)<br>விண்ணையும் சாடுவோம் (துணைப்பாடம்)<br>வல்லினம் மிகா இடங்கள் (இலக்கணம்) | 126-158 | ஆகஸ்ட் |




orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


| | | | | |
|---|---|---|---|---|
| 5. | கல்வி<br>கசடற மொழிதல் | கல்வியில் சிறந்த பெண்கள் (உரைநடை) | 159-196 | அக்டோபர் |
| | | குடும்ப விளக்கு (செய்யுள்) | | |
| | | சிறுபஞ்சமூலம் (செய்யுள்) | | |
| | | வீட்டிற்கோர் புத்தகசாலை (துணைப்பாடம்) | | |
| | | இடைச்சொல் - உரிச்சொல் (இலக்கணம்) | | |
| 6. | கலை, அழகியல், புதுமைகள்<br>கலை பல வளர்த்தல் | சிற்பக்கலை (உரைநடை) | 197-243 | அக்டோபர்<br>நவம்பர் |
| | | இராவண காவியம் (செய்யுள்) | | |
| | | நாச்சியார் திருமொழி (செய்யுள்) | | |
| | | செய்தி (துணைப்பாடம்) | | |
| | | புணர்ச்சி (இலக்கணம்) | | |
| | | திருக்குறள் (வாழ்வியல்) | | |
| 7. | நாகரிகம், தொழில், வணிகம்<br>நாடு, சமூகம், அரசு, நிருவாகம்<br>வாழிய நிலனே | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு (உரைநடை) | 244-285 | நவம்பர் |
| | | சீவக சிந்தாமணி (செய்யுள்) | | |
| | | முத்தொள்ளாயிரம் (செய்யுள்) | | |
| | | மதுரைக்காஞ்சி (செய்யுள்) | | |
| | | சந்தை (துணைப்பாடம்) | | |
| | | ஆகுபெயர் (இலக்கணம்) | | |
| 8. | அறம், தத்துவம், சிந்தனை<br>என்தலைக் கடனே | பெரியாரின் சிந்தனைகள் (உரைநடை) | 286-321 | ஜனவரி |
| | | ஒளியின் அழைப்பு (செய்யுள்) | | |
| | | தாவோ தே ஜிங் (செய்யுள்) | | |
| | | யசோதர காவியம் (செய்யுள்) | | |
| | | மகனுக்கு எழுதிய கடிதம் (துணைப்பாடம்) | | |
| | | யாப்பிலக்கணம் (இலக்கணம்) | | |
| 9. | மனிதம், ஆளுமை<br>அன்பென்னும் அறனே | விரிவாகும் ஆளுமை (உரைநடை) | 322-358 | பிப்ரவரி |
| | | அக்கறை (செய்யுள்) | | |
| | | குறுந்தொகை (செய்யுள்) | | |
| | | தாய்மைக்கு வறட்சி இல்லை (துணைப்பாடம்) | | |
| | | அணியிலக்கணம் (இலக்கணம்) | | |
| | | மாதிரி வினாத்தாள் | 359-362 | |




orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **36550290536**<br>Bank Name : **STATE BANK OF INDIA**<br>Bank Branch : PADI<br>IFSC : SBIN0005083 | A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **21000210001240**<br>Bank Name : **UCO BANK**<br>Bank Branch : Anna Nagar West<br>IFSC : UCBA0002100 |
| A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **6502699356**<br>Bank Name : **INDIAN BANK**<br>Bank Branch : ASIAD COLONY<br>IFSC : IDIB000A098 | A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **1154135000017684**<br>Bank Name : **KVB BANK**<br>Bank Branch : Anna Nagar<br>IFSC : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to


**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 91-44-4862 9977, 4862 7755
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com


www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

## கவிதைப் பேழை

இயல் - 1

### தமிழ்விடு தூது

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்
குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ - திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே.

★ ★ ★

இயல் - 2

### பெரியபுராணம்

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு ※
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம். - சேக்கிழார்

★ ★ ★

### புறநானூறு

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம் காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே! - குடபுலவியனார்

★ ★ ★

இயல் - 3

### திருக்குறள்

#### பொறையுடைமை

3. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம். காலாண்டுத் தேர்வு 2019 ※
தகுதியான் வென்று விடல்.

#### கேள்வி

7. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


### வினைத்தூய்மை

14. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர். – திருவள்ளுவர்

★★★

இயல் – 4

## ஓ, என் சமகாலத் தோழர்களே!

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்.
ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள். – வைரமுத்து

★★★

## உயிர்வகை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே. – தொல்காப்பியர்

★★★

இயல் – 5

## சிறுபஞ்சமூலம்

### அறிவுடையார் தாமே உணர்வர்

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார், ※
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு. – காரியாசான்

★★★

இயல் – 6

## இராவண காவியம்

### மருதம்

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்



www.surabooks.com


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


நெல்லினைக் கரும்பு காக்கும்
    நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
    வஞ்சியும் மருதம் பூக்கும். (72)

– புலவர் குழந்தை

★ ★ ★

## திருக்குறள்

### குடிமை

1. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

### சான்றாண்மை

2. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

### நாணுடைமை

3. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

### உழவு

அரையாண்டுத் தேர்வு 2019

4. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

– திருவள்ளுவர்

★ ★ ★

இயல் - 7

## சீவக சிந்தாமணி

### தலை வணங்கி விளைந்த நெற்பயிர்

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

– திருத்தக்கதேவர்

★ ★ ★

## முத்தொள்ளாயிரம்

### சேரநாடு

அரையாண்டுத் தேர்வு 2019

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்டது) எனவெரீஇப் புள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு.

★ ★ ★

மனப்பாடச் செய்யுள்

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் - 8

## யசோதர காவியம்

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.

★ ★ ★

இயல் - 9

## அக்கறை

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
மீதான அக்கறை.

– கல்யாண்ஜி

★ ★ ★



www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


# இயல் 1

அமுதென்று பேர்

# திராவிட மொழிக்குடும்பம்

உரைநடை

## மதிப்பீடு

### பலவுள் தெரிக

**1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| குழு-1 | குழு-2 | குழு-3 | குழு-4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ................ | ........................ | ................. | .................... |

அ) 1-வங்கம், 2-மானு, 3-தாழிசை, 4-பிறவினை

ஆ) 1-தாழிசை, 2-மானு, 3-பிறவினை, 4-வங்கம்

இ) 1-பிறவினை, 2-தாழிசை, 3-மானு, 4-வங்கம்

ஈ) 1-மானு, 2-பிறவினை, 3-வங்கம், 4-தாழிசை

**விடை: அ) 1-வங்கம், 2-மானு,3-தாழிசை, 4-பிறவினை**

### குறுவினா

**1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?** காலாண்டுத் தேர்வு 2019

நாங்கள் பேசும் மொழி தமிழ். அம்மொழி இந்திய மொழிக் குடும்பத்தில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

### சிறுவினா

**1. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.** காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019

மொழிகள் பரவிய நில அடிப்படையில் திராவிட மொழிகள் மூன்று வகைப்படும். அவை, தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள்.

**தமிழ் :**

(i) திராவிட என்னும் சொல்லே தமிழ் என்னும் சொல்லில் இருந்து உருவானதே ஆகும்.

(ii) தமிழ் தொன்மையும் இலக்கண இலக்கியவளமும் உடையது.

(iii) திராவிட மொழிகளுள் பிற மொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படுகிறது.

(iv) ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் பெற்ற மொழி.

**2. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**

திராவிட மொழிகளுக்கெனச் சில பொதுப் பண்புக்கூறுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்றுபோலவே அமைந்துள்ளதைப் பார்க்கலாம்.

(i) மூன்று – தமிழ்

(ii) மூணு – மலையாளம்

அமுதென்று பேர்

www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


(iii) மூடு – தெலுங்கு
(iv) மூரு – கன்னடம்
(v) மூஜி – துளு

3. **காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?** ※

(i) திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்தமொழியாகத் திகழ்கின்றது தமிழ். பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது

(ii) தமிழ் மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது.

(ii) அத்துடன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

## நெடுவினா

1. **திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.** காலாண்டுத் தேர்வு 2019 ※

திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்தமொழியாகத் திகழ்கின்றது தமிழ். பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது தமிழ்மொழி என்பதைச் சான்றுகளுடன் காணலாம்.

கால்டுவெல் தமது 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலில் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளை எடுத்துரைத்தார்.

திராவிட மொழிகளுக்குச் சில பொதுப்பண்புக் கூறுகள் காணப்படுகின்றன.

(i) **அடிச்சொல் :**

சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால் அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருக்கிறது.

| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம், கன்னடம் |
| கன்னு | தெலுங்கு, குடகு |
| ஃகன் | குரூக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

(ii) **எண்ணுப் பெயர்கள்:**

மூன்று – தமிழ் மூணு – மலையாளம் மூடு – தெலுங்கு
மூரு – கன்னடம் மூஜி – துளு

(iii) **குறில், நெடில் வேறுபாடு :**

குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

அடி – குறில் ஆடி – நெடில் வளி – குறில்
வாளி – நெடில்

(iv) **பால் பாகுபாடு:**

திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு, உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது. அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை, தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர்.




orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



(எ.கா.)

| ஆண் | பெண் |
|---|---|
| கடுவன் | மந்தி |
| களிறு | பிடி |

**(v) வினைச் சொற்கள்:**

திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

**(எ.கா)** வந்தான் (உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமை)

தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம் பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

இவ்வாறு திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்கு தமிழ் பெருந்துணையாக இருக்கிறது.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியுமா? உங்கள் பெயரும் உங்கள் நண்பர் பெயரும் தனித்தமிழில் அமைந்துள்ளதா? கண்டறிக.**

(i) என்னுடைய பெயர் கலைச் செல்வி
என் பெயரின் பொருள் 'கலையின் குழந்தை'

(ii) என் நண்பர் பெயர் மாரிகா
இப்பெயரின் பொருள் 'மழையின் சோலை'

(iii) மற்றொரு தோழியின் பெயர் கமழினி.
இப்பெயரின் பொருள் 'மணம் நிறைந்தவள்.'

**2. பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ்மொழியின் வேர்ச்சொற்கள், வடிவ மாற்றம் பெறுகின்றன என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

**(எ.கா) செய்-செய்தாள், செய்கிறாள், செய்வாள், செய்து, செய்த, செய்வீர், செய்கிறோம்.**

**வா ........................**

**மாணவன் 1** : நம் தமிழ்மொழியைப் பிறமொழிப் பேசுபவர்களாலும் எளிதில் படிக்கவும் பேசவும் இயலும் என்பதை நாம் அனைவரும் அறிந்ததே. அதற்கு நம் தமிழ்மொழியின் இலக்கண வளம் தான் காரணம்.

**மாணவன் 2** : எப்படிச் சொல்கிறாய்? கொஞ்சம் விளக்கமாகக் கூறு.

**மாணவன் 1** : கூறுகிறேன் கேள். எடுத்துக்காட்டாக அடிச்சொல் என்றும் வேர்ச்சொல் என்றும் கூறப்படும் சொற்கள் சுட்டுப் பெயர்களுடனும் மூவிடப் பெயர்களுடனும் சேரும்போது பல மாற்றங்களைப் பெறும்.

**மாணவன் 2** : அடிச்சொல் என்கிறாயே அதன் செயல் யாது?

**மாணவன் 1** : பகுப்பாய்வு முறையில் பிரிக்க முடியாத நிலையில் உள்ள சொல் வேர்ச்சொல் எனப்படும். இவை விகுதிகளைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும். வேர்ச்சொல்லானது பகுக்க முடியாத வினைச் சொல் ஆகும். இது கட்டளைப் பொருளில் நிற்கும். இது முக்காலங்களுடனும் மூவிடப் பெயர்களுடன்

அழுதென்று பேர்

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


சேரும்போது சில மாற்றங்களைப் பெறும். உதாரணத்திற்குச் 'செய்' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இச்சொல் முக்காலங்களில் கூறும்போது ஏற்படும் மாற்றம்.

| |
|---|
| செய் – வேர்ச்சொல் |
| செய்தாள் – இறந்த காலம் |
| செய்கிறாய் – நிகழ்காலம் |
| செய்வாள் – எதிர்காலம். |

முக்காலத்தையும் மூவிடத்தையும் குறிப்பிடுவன 'வா' வேர்ச்சொல்

| |
|---|
| வந்தான் – இறந்த காலம் |
| வருகிறான் – நிகழ்காலம் |
| வருவான் – எதிர்காலம் |

**மாணவன் 1** : நீ கூறிய இச்சொற்கள் மூவிடங்களையும் சுட்டுகிறதே?

**மாணவன் 2** : ஆமாம். மூவிடப் பெயரையும் சுட்டும். வந்தான், வருகிறான், வருவான், என்பவை அவன் வந்தாள், அவன் வருகிறான், அவன் வருவான் எனக் குறிப்பிடப்படும்போது அவன் படர்க்கைப் பெயரில் சுட்டப்படுகிறது.

**மாணவன் 1** : இதே போல் தன்மை முன்னிலை வருமாறு அமைவதைக் கூறு.

**மாணவன் 2** : சொல்கிறேன் கேள்.

| | |
|---|---|
| நான் வந்தேன். | இவை தன்மை இடத்தைக் குறிக்கின்றது. முக்காலமும் அமையப்பெற்றுள்ளது. |
| நான் வருகிறேன். | |
| நான் வருவேன். | |

| | |
|---|---|
| நீ வந்தாய். | இவை முன்னிலை இடத்தையும் முக்காலமும் அமையப்பெற்றுள்ளது. |
| நீ வருகின்றாய். | |
| நீ வருவாய் | |

**மாணவன் 1** : அடிச்சொல் முக்காலம், மூவிடம் இவற்றை மட்டும்தான் ஏற்குமா?

**மாணவன் 2** : அடிச்சொல் முக்காலம், மூவிடம் இவற்றோடு (ஒருமை, பன்மை 'எண்'ணையும் ஏற்கும்)

| | |
|---|---|
| வந்தோம் | தன்மை/மூவிடம்/உயர்திணை |
| வருகின்றோம் | |
| வருவோம் | |
| வந்தீர்கள் | முன்னிலை/மூவிடம்/உயர்திணை |
| வருகின்றீர்கள் | |
| வருவீர்கள் | |
| வந்தனர் | படர்கை/மூவிடம்/உயர்திணை |
| வருகின்றனர் | |
| வருவார்கள் | |

**மாணவன் 1** : 'வா' என்ற வேர்ச்சொல் அஃறிணையில் வரும்போது ஏற்படும் மாற்றத்தை நான் கூறுகிறேன். ஒருமையில் 'அது வந்தது' என்று பன்மையில் 'அவை வந்தன' என்றும் மாற்றம் பெறுகிறது. சரியா?

**மாணவன் 2** : சரியாகச் சொன்னாய். இவ்வாறு நம் தமிழ்மொழியில் உள்ள வேர்ச்சொற்கள் வடிவ மாற்றம் பெறுகின்றன.


www.surabooks.com

orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை என்றவர் ............. .** காலாண்டுத் தேர்வு 2019

அ) மாக்ஸ்முல்லர் ஆ) கால்டுவெல்
இ) ச.அகத்தியலி ங்கம் ஈ) எல்லிஸ் **விடை: இ) ச.அகத்தியலிங்கம்**

2. **திராவிட மொழிகள் நான்கினையும் ஒப்புமைப்படுத்தி முதன் முதலில் கருத்து தெரிவித்தவர் .............**

அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) மாக்ஸ் முல்லர்
இ) ஹோக்கன் ஈ) பிரான்சிஸ் எல்லிஸ்
**விடை: ஈ) பிரான்சிஸ் எல்லிஸ்**

3. **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் ............. .**

அ) கால்டுவெல் ஆ) தொ.ப.மீனாட்சி சுந்தரம்
இ) கமில்சுவலபில் ஈ) குமரிலபட்டர் **விடை: அ) கால்டுவெல்**

4. **திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் ............. .**

அ) ஹீராஸ் பாதிரியார் ஆ) குமரிலபட்டர்
இ) பிரான்சிஸ் எல்லிஸ் ஈ) கால்டுவெல் **விடை: ஆ) குமரிலபட்டர்**

5. **தற்போது திராவிட மொழிகளின் எண்ணிக்கை ............. .**

அ) 26 ஆ) 22 இ) 24 ஈ) 28 **விடை: ஈ) 28**

6. **ஒப்பியல் ஆய்வுக்கு பெருந்துணையாக அமைந்துள்ள மொழி ............. .**

அ) சமஸ்கிருதம் ஆ) ஆங்கிலம்
இ) தமிழ் ஈ) மலையாளம் **விடை: இ) தமிழ்**

7. **தொன்மையும் இலக்கண வளமும் உடையது ............. மொழி .**

அ) தமிழ் ஆ) மலையாளம்
இ) துளு ஈ) சமஸ்கிருதம் **விடை: அ) தமிழ்**

8. **திணை, பால், எண் அகிய பால் காட்டும் விகுதிகள் இல்லாத மொழி ............. .**

அ) தமிழ் ஆ) மலையாளம்
இ) தெலுங்கு ஈ) கன்னடம் **விடை: ஆ) மலையாளம்**

9. **மால்தோ, தோடா, கோண்டி ஆகிய மொழிகளை இணைத்து தமிழியன் என்று பெயரிட்டவர் .............**

அ) மாக்ஸ்முல்லர் ஆ) ஹோக்கன்
இ) கால்டுவெல் ஈ) பிரான்சிஸ் எல்லிஸ் **விடை: ஆ) ஹோக்கன்**

10. **வட திராவிட மொழிகள் ............. .**

அ) தமிழ், கன்னடம் ஆ) மால்தோ, தெலுங்கு
இ) மால்தோ, பிராகுயி ஈ) துளு, இருளா **விடை: இ) மால்தோ, பிராகுயி**

11. **திராவிட மொழிகளுள் அண்மையில் கண்டறியப்பட்ட மொழி ............. .**

அ) எருகலா, தங்கா ஆ) குறும்பா, சோழிகா
இ) பிராகுயி, இருளா ஈ) கோண்டி, துளு
**விடை: அ, ஆ) எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா**

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


12. **பொருத்துக.**

| அடிச்சொல் | | திராவிட மொழிகள் | |
|---|---|---|---|
| அ) | கண்ணு | 1. | தெலுங்கு |
| ஆ) | கன்னு | 2. | தோடா |
| இ) | கெண் | 3. | மலையாளம் |
| ஈ) | கொண் | 4. | பாஜி |

அ) 3, 2, 1, 4 ஆ) 4, 3, 1, 2
இ) 3, 1, 4, 2 ஈ) 4, 1, 2, 3 **விடை: இ) 3, 1, 4, 2**

13. **பொருத்துக.**

| இலக்கியம் | | மொழி | |
|---|---|---|---|
| அ) | ராமசரிதம் | 1. | கன்னடம் |
| ஆ) | பாரதம் | 2. | தமிழ் |
| இ) | கவிராஜமார்க்கம் | 3. | மலையாளம் |
| ஈ) | சங்க இலக்கியம் | 4. | தெலுங்கு |

அ) 4, 3, 1, 2 ஆ) 3, 4, 1, 2
இ) 4, 1, 2, 3 ஈ) 3, 1, 4, 2 **விடை: ஆ) 3, 4, 1, 2**

இயல் 1

**விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

1. **இந்தியாவில் பேசப்படும் மொழிகளை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரித்துள்ளனர்.**
இந்தியாவில் பேசப்படும் மொழிகளை எத்தனை மொழிக்குடும்பங்களாகப் பிரித்துள்ளனர்?

2. **இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.**
இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டவர் யார்?

3. **திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர்.**
திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் யார்?

4. **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் கால்டுவெல்.**
திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் யார்?

5. **திராவிட மொழிக்குடும்பத்தை மொழிகள் பரவிய நில அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தியுள்ளனர்.**
திராவிட மொழிக்குடும்பத்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளனர்?

6. **தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென்திராவிட மொழிகளாகும்.**
தென்திராவிட மொழிகள் யாவை?

7. **தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.**
தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவி யாது?
(அல்லது)
மொழி எதற்குக் கருவியானது?

8. **திராவிட மொழிகள் மொத்தம் இருபத்தெட்டு எனக் கூறுவர்.**
திராவிட மொழிகள் மொத்தம் எத்தனை?


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



**நிறுத்தக்குறியிடுக.**

1. **உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு தொடர்பு அமைப்பு உறவு ஆகியவற்றின் அடிப்படையில் பல மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன**

   உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் பல மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

2. **தமிழ் வடமொழியின் மகளன்று அது தனிக்குடும்பத்திற்கு உரிய மொழி சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி தமிழுக்கும் இந்தியாவின் பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம்**

   தமிழ் வடமொழியின் மகளன்று; அது தனிக்குடும்பத்திற்கு உரிய மொழி; சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி; தமிழுக்கும் இந்தியாவின் பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம்.

3. **கால்டுவெல்லுக்குப் பின்னர் ஸ்டென்கனோ கே வி சுப்பையா எல் வி இராமசுவாமி பரோ எமினோ கமில்சுவலபில் ஆந்திரனோவ் தெ பொ மீனாட்சிசுந்தரம் முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்**

   கால்டுவெல்லுக்குப் பின்னர் ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எல்.வி. இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ. மீனாட்சிசுந்தரம் முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

**சந்திப்பிழையைத் திருத்தி எழுதுக.**

1. **தமிழாய்ந்த அயல்நாட்டறிஞரும் செம்மொழி தமிழின் சிறப்பை தரணியெங்கும் எடுத்துரைத்து மகிழ்கின்றனர்.**

   தமிழாய்ந்த அயல்நாட்டறிஞரும் செம்மொழித் தமிழின் சிறப்பைத் தரணியெங்கும் எடுத்துரைத்து மகிழ்கின்றனர்.

2. **இந்தியாவில் பேசப்படும் மொழிகளை நான்கு மொழி குடும்பங்களாக பிரிக்கின்றனர்.**

   இந்தியாவில் பேசப்படும் மொழிகளை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர்.

3. **சொற்களின் இன்றியமையா பகுதி வேர்சொல் அடிசொல் எனப்படும்.**

   சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல் அடிச்சொல் எனப்படும்.

4. **தமிழ்மொழி தனக்கென தனித்த இலக்கணவளத்தை பெற்று தனித்தியங்கும் மொழியாகும்.**

   தமிழ்மொழி தனக்கெனத் தனித்த இலக்கணவளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாகும்.

5. **தமிழ்மொழி தனிதன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னை புதுப்பித்து கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்குகிறது.**

   தமிழ்மொழி தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்குகிறது.

6. **ஒரே பொருளை குறிக்க பலசொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்ப பெற்ற மொழி தமிழேயாகும்.**

   ஒரே பொருளைக் குறிக்கப் பலசொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழேயாகும்.

7. **இந்திய நாடு மொழிகளின் காட்சி சாலையாக திகழ்கிறது என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.**

   இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

8. **பாவின் சுவைகளில் ஒன்றாக இளிவரல் என்ற துன்ப சுவையினை தமிழிலக்கணங்கள் சுட்டுகின்றன.**

   பாவின் சுவைகளில் ஒன்றாக இளிவரல் என்ற துன்பச் சுவையினைத் தமிழிலக்கணங்கள் சுட்டுகின்றன.

அமுதென்று பேர்

www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


## குறுவினா

1. **நான்கு மொழிக் குடும்பங்கள் யாவை?** காலாண்டுத் தேர்வு 2019

(i) இந்தோ – ஆசிய மொழிகள் (ii) திராவிட மொழிகள்
(iii) ஆஸ்திரோ ஆசிய மொழிகள் (iv) சீனா – திபெத்திய மொழிகள்.

2. **இந்தியா மொழிகளின் காட்சிச்சாலை என அழைக்கப்படுவதன் காரணம் யாது?** ※

1300க்கும் மேற்பட்ட மொழிகள் இந்தியாவில் பேசப்படுகின்றன. நான்கு வகை மொழிக் குடும்பங்களாக இவற்றைப் பிரிக்கின்றனர். மேலும், இங்குப் பல கிளைமொழிகள் பேசப்படுவதால் இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என ச. அகத்தியலிங்கம் குறிப்பிடுகிறார்.

3. **திராவிட மொழிகளில் சொல் ஒற்றுமை பட்டியல் தருக.**

**திராவிட மொழிகளில் சொல் ஒற்றுமை :**

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | துளு | கூர்க் |
|---|---|---|---|---|---|
| மரம் | மரம் | மானு | மரம் | மர | மர |
| ஒன்று | ஒண்ணு | ஒகடி | ஒந்து | ஒஞ்சி | – |
| நூறு | நூறு | நூரு | நூரு | நூது | – |
| நீ | நீ | நீவு | நீன் | ஈ | நின் |

4. **திராவிடா என்ற சொல் எதிலிருந்து பிறந்தது?**

தமிழ் என்ற சொல்லில் இருந்து தான் திராவிடா என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

5. **தென்னிந்திய மொழிகள் எவை என பிரான்சிஸ் எல்லிஸ் கூறுகிறார்?**

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தைப் பிரான்சிஸ் எல்லிஸ் என்பவர் முதன் முதலில் தெரிவித்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனப்பெயரிட்டார்.

6. **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?**

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் கால்டுவெல்.

7. **திராவிட மொழிக்குடும்பத்தின் வகைகளை வரிசைப்படுத்துக.**

திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

8. **தென் திராவிட மொழிகள் வரிசைப்படுத்துக.**

தமிழ், மலையாளம், கன்னடம் முதலானவை தென்திராவிட மொழிகளாகும்.

9. **கால்டுவெல்லுக்குப் பின்னர் திராவிட மொழிகளை ஆய்வு செய்தோர் யாவர்?**

ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில் ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சி சுந்தரம்.

## சிறுவினா

1. **திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் யாவை? சான்று தருக.**

திராவிட மொழிகளுக்கெனச் சில பொதுப் பண்புக்கூறுகள் உள்ளன. சொற்களின் முக்கியப் பகுதியான வேர்ச்சொல் என்பது அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


சான்று :

| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம், கன்னடம் |
| கன்னு | தெலுங்கு, கொடகு |
| ஃகன் | குரூக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

2. **தமிழின் தனித்தன்மைகள் யாவை?**

**தமிழின் தனித்தன்மைகள் :**

(i) தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடையது தமிழ் மொழியாகும்.

(ii) இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜித்தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென் ஆப்பிரிக்கா, மொரிசியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ்மொழி.

(iii) ஏனைய திராவிட மொழிகளை விடவும் தமிழ்மொழி தனக்கெனத் தனித்த இலக்கணவளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாகும்.

(iv) திராவிட மொழிகளுள் பிற மொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.

(v) தமிழ்மொழி திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.

(vi) ஒரேபொருளைக் குறிக்கப் பலசொற்கள் அமைந்த சொல்வளமும், சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழேயாகும்.

(vii) இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.

(viii) தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப்பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

3. **திராவிட மொழிகளின் பால்பாகுபாடு குறித்து எழுதுக.**

**பால்பாகுபாடு :**

(i) திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால் வடமொழியில் இவ்வாறு அமையவில்லை.

(ii) உயிரற்ற பொருள்களும் கண்ணுக்கே புலப்படாத நுண்பொருள்களும்கூட ஆண், பெண் என்று பாகுபடுத்தப்படுகின்றன. இம்மொழியில் கைவிரல்கள் பெண்பால் என்றும், கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன.

(iii) ஜெர்மன் மொழியிலும் இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது. முகத்தின் பகுதிகளான வாய், மூக்கு, கண் ஆகியவை வேறுவேறு பால்களாகச் சுட்டப்படுகின்றன. வாய் – ஆண்பால், மூக்கு – பெண்பால், கண் – பொதுப்பால் எனப் பகுக்கும் நிலை உள்ளது.

(iv) திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது.

(v) அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை.

(vi) தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர். (எ.கா. கடுவன் –மந்தி; களிறு – பிடி)




www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


**கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து விடையளி:**

இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1300க்கும் மேற்பட்டது. இவற்றை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். அவை, இந்தோ – ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ ஆசிய மொழிகள், சீன திபெத்திய மொழிகள் என அழைக்கப்படுகின்றன. பல கிளை மொழிகளும் இங்குப் பேசப்படுவதால் இந்திய நாடு 'மொழிகளின் காட்சிச் சாலையாகத்' திகழ்கிறது என்று ச. அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

**வினாக்கள் :**

1. **இந்தியாவில் பேசப்படும் நான்கு வகையான மொழிகள் யாவை?**

   இந்தோ – ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ ஆசிய மொழிகள், சீன–திபெத்திய மொழிகள்.

2. **இந்தியாவில் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன?**

   இந்தியாவில் 1300க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன.

3. **இந்திய நாட்டை 'மொழிகளின் காட்சிச்சாலை' என்று குறிப்பிட்டவர் யார்?**

   ச. அகத்தியலிங்கம்.

☆☆☆



**இயல் 1** — அமுதென்று பேர்

# தமிழோவியம்

**கவிதைப்பேழை**

**பாடல்**

காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!
அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் – உன்
நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்!
– காலம் பிறக்கும் முன்...

ஏனிவ் விருட்டெனக் கேட்டுவரும் – நீதி
ஏந்திய தீபமாய்ப் பாட்டுவரும்
மானிட மேன்மையைச் சாதித்திடக் – குறள்
மட்டுமே போதுமே ஓதி, நட...
– காலம் பிறக்கும் முன்...

எத்தனை எத்தனை சமயங்கள் – தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் – புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே...
– காலம் பிறக்கும் முன்...

விரலை மடக்கியவன் இசையில்லை – எழில்
வீணையில் என்று சொல்வதுபோல்
குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்
கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்!

– ஈரோடு தமிழன்பன்


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



## நூற்குறிப்பு

ஈரோடு தமிழன்பன் எழுதிய 'தமிழோவியம்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள கவிதை இது. இக்கவிதை குறித்துக் கவிஞர் முன்னுரையில் "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்து கொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆசிரியர் குறிப்பு

ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார். **ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ** எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார். இவரது **'வணக்கம் வள்ளுவ'** என்னும் கவிதை நூலுக்கு 2004ஆம் ஆண்டுக்கான **சாகித்திய அகாதெமி விருது** வழங்கப்பட்டது. **'தமிழன்பன் கவிதைகள்'** தமிழக அரசின் பரிசுபெற்ற நூல். இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## பொருள் தருக.

1. புனைந்து – புதிய வடிவம் கொடுத்து
2. நிகரிலா – ஒப்பிலா
3. எழில் – அழகு
4. சித்தர் மரபு – சித்தர் வழி
5. நீதி – நியாயம்
6. தீதறுக்கும் – தீமைகளை நீக்கும்
7. சமயம் – மதம்

## இலக்கணக்குறிப்பு

1. எத்தனை எத்தனை, விட்டுவிட்டு – அடுக்குத்தொடர்கள்
2. ஏந்தி – வினையெச்சம்
3. காலமும் – முற்றும்மை

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **வளர்ப்பாய் –** வளர் + ப் + ப் + ஆய்
   - வளர் – பகுதி
   - ப் – சந்தி
   - ப் – எதிர்கால இடைநிலை
   - ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

## தெரிந்து தெளிவோம்

1. உலகத் தாய்மொழி நாள் **பிப்ரவரி 21.**
2. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் **இலங்கை, சிங்கப்பூர்.**
3. இனிமையும் நீர்மையும் தமிழேனல் ஆகும். **– பிங்கல நிகண்டு**
4. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
   இனிதாவது எங்கும் காணோம். **– பாரதியார்**

அழுதென்று பேர்



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



## மதிப்பீடு

### பலவுள் தெரிக

**1. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! – எந்தக்**
**காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! ....... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்**

அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை

ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை

இ) மோனை, எதுகை, இயைபு

ஈ) மோனை, முரண், அந்தாதி

**விடை: இ) மோனை, எதுகை, இயைபு**

### குறுவினா

**1. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.** காலாண்டுத் தேர்வு 2019

'காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!'

தமிழ் என்றும் நிலையானது நிலைத்த மொழி என்றும் பசுமை மாறா இளமை மாறா மொழி தமிழ் மொழியே என்று தமிழ்மொழியின் அழியாத்தன்மையைக் கூறுவதால் இவ்வடிகள் என்னை ஈர்த்தன.

**2. அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை**
**அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் – இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?**

மக்களின் உள்ளத்தில் உள்ள அன்பையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் கூறும் இலக்கணத்தை அகப்பொருள் என்றும், அகம் சாராத அறம், பொருள், வீடு, கல்வி, வீரம், கொடை, புகழ் முதலியவற்றைக் கூறும் இலக்கணத்தைப் புறப்பொருள் என்றும் அமைந்த இலக்கியம் இலக்கணமாய்த் திகழ்வதை இவ்வரிகள் உணர்த்துகின்றன.

### சிறுவினா

**1. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் – உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

(i) பாரதியார் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்" என்று பாடியுள்ளார். அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் பிறமொழி நூல்களை நம் தமிழ்மொழியில் மொழி பெயர்ப்பேன்.

(ii) இலக்கியங்களைக் காலக் கண்ணாடி என்றும் கூறுவர். அதனால் இன்றைய காலக் கட்டத்திற்கு நம் மாணவர்களுக்குத் தேவையானவற்றை எளிதில் பொருள் விளங்கக்கூடிய வகையில் நூல்கள் இயற்றுவேன்.

(iii) மாற்றம் ஒன்றே மாறாதது என்பதை உணர்ந்த நாம் தற்கால அறிவியல் வளர்ச்சிக்கேற்றபடி, அத்துறையில் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுக்குக் கலைச் சொற்களைக் கண்டறிவேன்.

(iv) அறிவியல் சார்ந்த நூல்களை எளிமையான தமிழில் உருவாக்குவேன். இளைஞர்களுக்கு நல்வழிகாட்டும் இலக்கியங்களைப் படைப்பேன். இவ்வாறு தமிழைப் புதுக்கோலம் புனையச் செய்து அதனை வளர்ப்பேன்.




orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


## கற்பவை கற்றபின்

**1. பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பறையில் பேசுக.**

அவையோர்க்கு வணக்கம்!

நான், நம் மாணவப் பருவத்தினரின் எதிர்கால மாற்றங்களை உருவாக்கும் பழக்க வழக்கங்கள் பற்றித் தனித்தமிழில் பேசவிருக்கிறேன். நாம் அனைவருமே தற்கால நாகரிக ஈடுபட்டால் பழம்பெரும் நற்பழக்கங்களைக் கைவிட்டு விட்டோம். நம் பெற்றோர்கள் நம்மை எதிர்கால உலகின் தூண்கள், சிற்பிகள் என எண்ணுகின்றனர். அவர்களின் நம்பிக்கையை நடைமுறைப்படுத்துவது நம் ஒவ்வொருவரின் கடமை. அதற்கு மாணவர்களாகிய நாம் வளமான, வலுவான, நலமான உள்ளம் மற்றும் உடலோடும் மகிழ்வோடும் மனம் இறுக்கம் இன்றியும் ஆற்றல் புரிபவர்களாய் நற்சாதனையாளர்களாய்த் திகழ வேண்டுமெனில் பின்வருவனவற்றை நாம் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டும்.

தற்போதுள்ள கல்வி உலகம் வணிக உலகமாகவும், இயந்திர உலகமாகவும் உள்ளது. அதிகமான மதிப்பெண் பெற வேண்டும், வகுப்பில் முதல் மாணவனாக திகழ வேண்டும், வீட்டிலும் பள்ளியிலும் சரளமாக ஆங்கிலம் பேச வேண்டும், இதுவே பெற்றோர்களின் விருப்பமாக உள்ளது. நாம் நினைத்தால் மிக எளிதாகப் பெற்றோர்களின் இவ்விருப்பத்தை நிறைவேற்ற முடியும். நாம் மாற்றம் செய்ய வேண்டிய முதல் செயல் என்னவெனில் உணவு முறை.

நாம் இரவுப் பொழுதில் நீண்ட நேரம் உறங்காமல் கண்விழித்துத் தொலைக்காட்சி பார்த்துவிட்டு தூக்கத்தைத் தொலைக்கிறோம். ‘வைகறை துயில் எழு’ என்பதை மறந்தோம். அதனால் ஏழு மணிக்குப் படுக்கையிலிருந்து எழுகிறோம். வேகவேகமாகக் காலைக் கடன்களை முடித்துவிட்டு எட்டு மணிக்குப் பள்ளிக்குப் புறப்படுகிறோம். அம்மா நமக்காகத் தயார் செய்த சிற்றுண்டியைப் புறக்கணித்துவிட்டு பால் மட்டும் பருகிவிட்டு பள்ளிக்கு வருகிறோம்.

பள்ளியில் இடைவேளையில் உண்பதற்காக பதப்படுத்தப்பட்டு பொட்டலத்தில் அடைக்கப்பட்ட நொறுக்குத் தீனிகளை உண்கிறோம். உணவு இடைவேளையில் சிறிய டப்பாவில் கொண்டு வரும் உணவை உண்கிறோம். இரவில் அதிகமான உணவை உட்கொள்கிறோம். இது சரியான உணவு முறையல்ல.

**சரியான உணவு முறை :**

இரவு முழுவதும் உண்ணாமல் இருப்பதால் காலையில் அதிக உணவு உண்ண வேண்டும். மதியம் கொஞ்சமாக உண்ண வேண்டும். இரவில் எளிதில் செரிக்கக்கூடிய மென்மையான உணவைக் குறைந்த அளவே உண்ண வேண்டும்.

இரண்டாவது நம் உடல் அமைப்பு. இதற்கும் நாம் உண்ணும் உணவே அடிப்படை. நம் உடல் அமைப்பு அதற்கேற்றார்போல் நாம் சரியான முறையில் உணவு உண்டு உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

நமது உடலின் மேல்பகுதி அதாவது தோள்பகுதி அகலமாக விரிந்து இருக்க வேண்டும். நமது உடலில் நடுப்பகுதியான வயிற்றுப் பகுதியும் நடுப்பகுதியும் குறைவாக இருக்க வேண்டும். கால் பகுதி மெலிந்து இருக்க வேண்டும். இவ்வாறு நம் உடல் தோற்றம் அமைவதற்கு மேற்சொன்ன உணவு முறைகளைக் கடைபிடிக்க வேண்டும். பழம், கீரை, காய்கறிகளை உண்டு சரியான உடற்பயிற்சியை மேற்கொண்டால் மேற்குறிப்பிட்ட உடல் அமைப்பு கிடைக்கும். துரித உணவு, வறுத்த உணவு, பனிக்கூழ் போன்றவற்றைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


உணவு முறையும் உடற்பயிற்சியும் நல்ல கல்வியாளரை உருவாக்கும். இவற்றைச் சரிசெய்யாமல் படிப்பு படிப்பு என்றிருந்தால் நாம் கல்வியில் முழுமை பெற இயலாது. அது மன இறுக்கத்தை ஏற்படுத்தும் ஆர்வத்தோடு படித்தல், மனமகிழ்வோடு படித்தல் இடையிடையே ஓய்வு என்றிருத்தல் இவை நம்மை நன்மாணாக்கர்களாக மாற்றும். ஏட்டுக்கல்வி மட்டும் நம்மை நல்ல நிலைக்கு மாற்றாது. ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டல், கட்டுப்பாட்டுடன் இருத்தல், ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல், மனிதநேயத்துடன் வளர்தல், தொண்டு எண்ணத்துடன் இருத்தல், இவற்றையெல்லாம் மேற்கொண்டால் நாம் அனைவருமே எதிர்கால இந்தியாவின் தூண்களாக இருப்போம்.

**2.** **கவிதைத் தொடர்க.**

அன்னை சொன்ன மொழி
ஆதியில் பிறந்த மொழி
இணையத்தில் இயங்கும் மொழி
ஈடிலாத் தொன்மை மொழி
உலகம் போற்றும் மொழி
ஊர்கூடி வியக்கும் மொழி.

**விடை :**

எத்திசையும் புகழ்மணக்கும் மொழி
ஏற்றம்பல கண்ட மொழி
ஐந்திணைகளை வகுத்த மொழி
ஒருமித்து வளரும் மொழி
ஓங்கி உயரும் மொழி.

## கூடுதல் வினாக்கள்



### பலவுள் தெரிக.

**1.** **'தமிழோவியம்' எனும் கவிதை நூலை எழுதியவர் ............. .**

அ) தஞ்சை கவிராயர் ஆ) ஈரோடு தமிழன்பன்
இ) மாங்குடி மருதனார் ஈ) மதுரை காரியாசான்

**விடை: ஆ) ஈரோடு தமிழன்பன்**

**2.** **கவிஞர் ஈரோடு தமிழன்பனின் இயற்பெயர் ............. .**

அ) பிச்சமூர்த்தி ஆ) ஜெகதீசன்
இ) ஜெகதீஷ் ஈ) முடியரசன்

**விடை: ஆ) ஜெகதீசன்**

**3.** **தமிழன்பனின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் ............. .**

அ) தமிழன்பன் கவிதைகள் ஆ) சென்ரியு
இ) தமிழோவியம் ஈ) வணக்கம் வள்ளுவ

**விடை: ஈ) வணக்கம் வள்ளுவ**

**4.** **ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை என்று கூறியவர் ............. .**

அ) பிச்சமூர்த்தி ஆ) வல்லிக்கண்ணன்
இ) முடியரசன் ஈ) தமிழன்பன்

**விடை: ஈ) தமிழன்பன்**

**5.** **உலகத் தாய்மொழி நாள் ............. .**

அ) பிப்ரவரி 19 ஆ) பிப்ரவரி 20
இ) பிப்ரவரி 21 ஈ) பிப்ரவரி 24

**விடை: இ) பிப்ரவரி 21**


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



6. **தமிழை கொண்ட நாடுகள் ............ .**

அ) சிங்கப்பூர், மலேசியா　　ஆ) இலங்கை, கனடா

இ) இலங்கை, சிங்கப்பூர்　　ஈ) இந்தியா, இலங்கை

**விடை: இ) இலங்கை, சிங்கப்பூர்**

7. **யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று கூறியவர் ............ .**

அ) பாரதிதாசன்　　ஆ) சுரதா

இ) பாரதியார்　　ஈ) திரு.வி.க

**விடை: இ) பாரதியார்**

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

எத்தனை எத்தனை சமயங்கள் – தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் – புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே...

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**

அ) தமிழோவியம்　　ஆ) தமிழ்விடுதூது

இ) தமிழ்ஒளி　　ஈ) பிள்ளைத்தமிழ்

**விடை: அ) தமிழோவியம்**

2. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**

அ) உ.வே.சா　　ஆ) திரு.வி.க

இ) ஈரோடு தமிழன்பன்　　ஈ) முடியரசன்

**விடை: இ) ஈரோடு தமிழன்பன்**

3. **எத்தனை எத்தனை – இலக்கணக்குறிப்பு தருக.**

அ) இரட்டைக்கிளவி　　ஆ) அடுக்குத்தொடர்

இ) உம்மைத்தொகை　　ஈ) வினைத்தொகை

**விடை: ஆ) அடுக்குத்தொடர்**

4. **தீதறுக்கும் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................**

அ) தீ + அறுக்கும்　　ஆ) தீ + தறுக்கும்

இ) தீது + அறுக்கும்　　ஈ) தீது + தறுக்கும்

**விடை: இ) தீது + அறுக்கும்**

## குறுவினா

1. **தமிழோவியம் எனும் கவிதை நூலைப் பற்றி குறிப்பு வரைக.**

(i) ஈரோடு தமிழன்பன் எழுதிய தமிழோவியம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ள கவிதை இது.

(ii) இக்கவிதை குறித்துக் கவிஞர் முன்னுரையில் “ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை பாடலும் அப்படித்தான்!” என்று குறிப்பிட்டுள்ளார்

## சிறுவினா

2. **ஈரோடு தமிழன்பன் பற்றி குறிப்பு வரைக.**

(i) ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

(ii) ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.

(iii) இவரது ‘வணக்கம் வள்ளுவ’ என்னும் கவிதை நூலுக்கு 2004ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. ‘தமிழன்பன் கவிதைகள்’ தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்.

(iv) இவரது கவிதைகள் இந்தி, ஆங்கிலம், உருது, மலையாளம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

☆ ☆ ☆

அமுதென்று பேர்

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


இயல் 1

அமுதென்று பேர்

# தமிழ்விடு தூது

கவிதைப்பேழை

## பாடல்

**சீர்பெற்ற செல்வம்**

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்

வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே – அந்தரமேல்

முற்றும் உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார்நீ
குற்றம்இலாப் பத்துக் குணம்பெற்றாய் – மற்றொருவர்

ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மேல் உண்டோநீ
நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய் – நாக்குலவும்

ஊனரசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள்உணவு
ஆன நவரசம்உண் டாயினாய் – ஏனோர்க்கு

அழியா வனப்பு ஒன்று அலது அதிகம் உண்டோ
ஒழியா வனப்புஎட்டு உடையாய்... **(கண்ணிகள் 69-76)**



## பாடலின் பொருள்

இனிக்கும் தெளிந்த அமுதமாய் அந்த அமிழ்தினும் மேலான முத்தி ஆகிய விடுதலை தரும் கனியே! **இயல், இசை, நாடகம்** என, மூன்றாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் வேண்டுகோள் ஒன்றுள்ளது. அதைக் கேட்பாயாக.

தமிழே! உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு என்ற நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்புக் கொள்கின்றனர். பிறர் படிக்கும் வகையில் நீ அவற்றைக் கொண்டிருக்கிறாய். அதனால் உனக்குத் **தாழிசை, துறை, விருத்தம்** என்னும் மூவகைப் பாவினங்களிலும் உறவு ஏதேனும் உண்டோ?

பாவின் திறம் அனைத்து கைவரப்பெற்று (பொருந்தி நின்று) என்றுமே **'சிந்தா'** (கெடாத) **மணியாய்** இருக்கும் உன்னை (இசைப்பாடல்களுள் ஒருவகையான) 'சிந்து' என்று (அழைப்பது நின் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு) கூறிய நா இற்று விழும் அன்றோ?

வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள்கூட சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள். ஆனால், நீயோ பத்துக்குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் **பத்துக்குணங்களையும்** பெற்றுள்ளாய்.

மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்திற்குமேல் இல்லை. நீயோ புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடைமெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



நாவின்மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் **சுவைகள் ஆறுக்கு** மேல் இல்லை. நீயோ செவிகளுக்கு விருந்தளிக்கும் **ஒன்பது சுவைகளைப்** பெற்றுள்ளாய். தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அழியாத **அழகு** ஒன்றே ஒன்று அல்லாமல் அதிகம் உண்டோ? நீயோ நீங்காத அம்மை முதலிய **அழகுகள் எட்டினைப்** பெற்றுள்ளாய்.

## நூற்குறிப்பு

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் 'தூது' என்பதும் ஒன்று. இது, **'வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்'** என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இது தலைவன் தலைவியருள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக **'மாலையை வாங்கி வருமாறு'** அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் **'கலிவெண்பா'** வால் இயற்றப்படுவதாகும். தமிழ்விடு தூது, மதுரையில் கோவில்கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல்கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் **268** கண்ணிகளைக் கொண்டுள்ளது. தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் சில கண்ணிகள் இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. இந்நூலை **1930இல் உ.வே.சா.** முதன் முதலில் பதிப்பித்தார்.

இதன் **ஆசிரியர் யார்** என அறிந்துகொள்ள இயலவில்லை.

## சொல்லும் பொருளும்

1. குறம், பள்ளு – சிற்றிலக்கிய வகைகள்
2. மூன்றினம் – துறை, தாழிசை, விருத்தம்
3. திறமெல்லாம் – சிறப்பெல்லாம்
4. சிந்தாமணி – சிதறாத மணி (சீவகசிந்தாமணி) என்னும் இருபொருளையும் குறிக்கும்.
5. சிந்து – ஒரு வகை இசைப்பாடல்
6. முக்குணம் – மூன்று குணங்கள் (சமத்துவம், அமைதி, மேன்மை ஆகியவற்றைச் சுட்டும் குணம்)
7. இராசசம் – போர், தீவிரமான செயல்களைக் குறிக்கும் குணம்
8. தாமசம் – சோம்பல், தாழ்மை போன்றவற்றைக் குறிக்கும் குணம்
9. பத்துக்குணம் – செறிவு, சமநிலை முதலிய பத்துக்குண அணிகள்
10. வண்ணங்கள் ஐந்து – வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை
11. வண்ணம்நூறு – குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு
12. ஊனரசம் – குறையுடைய சுவை
13. நவரசம் – வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை ஆகிய ஒன்பது சுவை.
14. வனப்பு – அழகு. அவை அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.

## இலக்கணக்குறிப்பு

1. முத்திக்கனி – உருவகம்
2. தெள்ளமுது – பண்புத்தொகை
3. குற்றமிலா, சிந்தாமணி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்
4. நா – ஓரெழுத்து ஒரு மொழி
5. செவிகள் உணவான – நான்காம் வேற்றுமைத்தொகை



www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


## பகுபத உறுப்பிலக்கணம்

1. **கொள்வார் –** கொள் + வ் + ஆர்
   - கொள் – பகுதி
   - வ் – எதிர்கால இடைநிலை
   - ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி
2. **உணர்ந்த –** உணர் + த்(ந்) + த் + அ
   - உணர் – பகுதி
   - த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம்
   - த் – இறந்தகால இடைநிலை
   - அ – பெயரெச்ச விகுதி

## மதிப்பீடு

### பலவுள் தெரிக

1. **தமிழ்விடு தூது ................. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.** காலாண்டுத் தேர்வு 2019

   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

   **விடை: இ) சிற்றிலக்கியம்**

2. **விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.** அரையாண்டுத் தேர்வு 2019

   அ) ................. இனம் ஆ) வண்ணம் .....................
   இ) ............. குணம் ஈ) வனப்பு ............................
   க) மூன்று, நூறு, பத்து, எட்டு உ) எட்டு, நூறு, பத்து, மூன்று
   ங) பத்து, நூறு, எட்டு, மூன்று ச) நூறு, பத்து, எட்டு, மூன்று

   **விடை: க) மூன்று, நூறு, பத்து, எட்டு**

3. **<u>அழியா</u> வனப்பு, <u>ஒழியா</u> வனப்பு, <u>சிந்தா</u> மணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு** காலாண்டுத் தேர்வு 2019

   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

   **விடை: ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரச்சம்]**

### பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்று இனத்தும் உண்டோ – திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே.

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**

   அ) தமிழ்விடு தூது ஆ) நாரைவிடு தூது
   இ) தமிழோவியம் ஈ) முத்தொள்ளாயிரம்

   **விடை: அ) தமிழ்விடு தூது**

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



2. **குறம், பள்ளு என்பவை யாவை?**

அ) பதினெண் கீழ்க்கணக்கு ஆ) பதினெண் மேல்கணக்கு
இ) சிற்றிலக்கியங்கள் ஈ) ஐம்பெருங்காப்பியங்கள்

**விடை: இ) சிற்றிலக்கியங்கள்**

3. **சிந்து என்பது என்ன?**

அ) நாட்டுப்புறப்பாடல் ஆ) இசைப்பாடல்
இ) பக்திப்பாடல் ஈ) கதைப்பாடல்

**விடை: ஆ) இசைப்பாடல்**

4. **சிந்தாமணி என்பதன் பொருள் யாது?**

அ) சீவகசிந்தாமணி ஆ) சிகப்பான மணி
இ) சிதறாத மணி ஈ) அ மற்றும் இ

**விடை: ஈ) அ மற்றும் இ**

## குறுவினா

1. **கண்ணி என்பதன் விளக்கம் யாது?**

இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர். அதேபோல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

2. **ஒன்பது சுவைகள் யாவை?**

வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை ஆகிய ஒன்பது சுவைகள் ஆகும்.

3. **எண்வகை வனப்புகள் யாவை?**

அழகு. அவை அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகியவை எண்வகை வனப்புகள் ஆகும்.

## நெடுவினா

1. **தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.**
**(அ) தமிழ்விடுதூது குறிப்பிடும் வனப்புகளை எழுதுக.** காலாண்டுத் தேர்வு 2019

(i) இனிக்கும் தெளிந்த அமுதமாய் அந்த அமுதினும் மேலான வீடுபேற்றைத் தருகின்ற கனியாகத் திகழ்கிறது. இயல், இசை, நாடகம் என மூன்றாய்ச் சிறந்து விளங்குகிறது.

(ii) அறிவால் உண்ணப்படும் தேனாக இனிக்கிறது. புலவர்கள் குறவஞ்சி, பள்ளு ஆகிய நூல்களைப் பாடி சிறப்புப் பெறுவதற்கு, அவற்றைப் படிக்க எடுத்துக் கொடுக்கிறது. அதனால் தாழிசை, துறை, விருத்தம் ஆகிய மூவகைப் பாவினங்களிலும் தமிழ் உறவு கொண்டு சிறப்புடையது.

(iii) பாவின் திறம் அனைத்தும் கைவரப் பெற்று, என்றும் சிந்தாமணியாய்த் தமிழ் விளங்குகிறது. வானத்தில் வசிக்கும் தேவர்கள்கூட மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள். ஆனால் தமிழ் பத்துக் குணங்களைப் பெற்றுள்ளது.

(iv) மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் ஐந்திற்கு மேலில்லை. ஆனால் தமிழோ நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளது.

(v) நாவின் மீது பொருந்தும் உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை. ஆனால் தமிழோ செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளது. தமிழ்மொழி அழியாத அம்மை முதலான எட்டு அழகுகளைப் பெற்றுள்ளது.

(vi) தமிழ் இத்தகைய சிறப்புகளைப் பெற்றுள்ளதால், தூது அனுப்புவதற்குத் தமிழே சிறந்தது என்று தமிழ்விடு தூது காரணங்களாகக் காட்டுகின்றது.

அழுதென்று பேர்


www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


## கற்பவை கற்றபின்

**1. நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ்மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்றை எழுதுக.**

உலக மொழிகளில் சிறந்த மொழி தமிழ் மொழியேயாகும். எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தமிழ்மொழி. தமிழ் எழுத்துகளின் ஒலிகள் மிக இயற்கையாக எளிமையாக அமைந்திருப்பதால் எவ்வித இடர்பாடுமின்றி ஒலிகளை ஒலிக்க இயலும். மென்மையான ஓசையுடைய மொழி தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பேசப்பட்டு பேச்சுவழக்கிலும் எழுத்துவழக்கிலும் இன்றளவும் அழியாமல் பேசப்பட்டு வருகிறது.

மக்கள் தங்களுடைய உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களையும் கருத்துகளையும் தாங்கள் எண்ணியவாறே எடுத்துரைக்கும் வல்லமைப் பெற்ற சொல்வளம் பெற்ற மொழி நம் தமிழ்மொழி. மற்றவர்கள் விரும்பிக் கேட்குமாறு அமைந்த சொல்லின்பமும் உடைய மொழி நம் மொழி. அதனால்தான் தமிழ்மொழியில் காலந்தோறும் மாற்றிக்கொண்டு பல வடிவங்களில் இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

தம் கருத்துகளைச் சிறந்த சொற்களால் திறம் பட உரைப்பதற்கு ஏதுவாக இனிய பல சொற்களைக் கொண்ட மொழியாக விளங்குகிறது. “உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்” என்பது பாரதியாரின் கூற்று. உள்ளம் தூய்மைபெறின் சொல்லும் தூய்மை பெறும், செயலும் தூய்மை பெறும். அவ்வாறு உள்ளம் தூய்மை பெறுவதற்கான எல்லா நெறிகளும் தமிழ்மொழியில் இருப்பது மொழிக்கும் நமக்கும் பெருமை.

தமிழ்மொழியில் ஒரு பொருளைக் குறிப்பதற்குப் பல சொற்களும் பல பொருளைக் குறிப்பதற்கு ஒரு சொல்லும் உள்ளன. இளமைப் பெயர்கள், தொகுப்புப் பெயர்கள், வினைப் பெயர்கள் எனப் பல உள்ளன. ஒரு பொருளின் பல நிலைகளுக்கும் தாவர இலைப் பெயர்களும், இலையின் வளர்ச்சிக்கேற்ற பெயர்களும், பூ தோன்றுவது முதல் உதிர்வது வரை உள்ள நிலைகளுக்கும் சொற்கள் உண்டு. இதனால் எவ்விதக்குழப்பமின்றி நாம் பேசவியலும்.

திணை பாகுபாடு, ஒருமை, பன்மை போன்ற இலக்கண அமைப்பு முறை நம் கருத்துகளைத் தெளிவாக்கும். நாகரிகம் வளர வளர, மக்களிடையே புதுப்புதுப் பொருள்கள் தோன்றின. அறிவியல் வளர்ச்சியினாலும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினாலும் புதிய சொற்கள் தோன்றின. நாம் அவற்றிற்கெல்லாம் கலைச் சொற்களைக் கண்டறிந்து விட்டோம். இதனால் நம் எண்ணங்களைத் தமிழில் எளிதாக எடுத்துரைக்க முடிகின்றது.

**2. படித்துத் திரட்டுக.**

“காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமேனியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க.”

– கவியோகி சுத்தானந்த பாரதியார்

**இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.**

**இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்கள் :** குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், சூளாமணி, திருக்குறள்.


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. கண்ணியில் வரும் அடிகள்** காலாண்டுத் தேர்வு 2019

அ) இரண்டடி ஆ) மூவடி இ) நான்கடி ஈ) ஐந்தடி **விடை: அ) இரண்டடி**

**2. ஊனரசம் என்பதன் பொருள் .............. .**

அ) மிக்க சுவை ஆ) சுவையற்ற
இ) குறையுடைய சுவை ஈ) நவரசம் **விடை: இ) குறையுடைய சுவை**

**3. தமிழ்விடு தூது நூலை பதிப்பித்தவர் .............. .**

அ) திரு.வி.க ஆ) சுரதா இ) பாரதிதாசன் ஈ) உ.வே.சா
**விடை: ஈ) உ.வே.சா**

**4. தமிழ்விடு தூது நூலில் அமைந்துள்ள கண்ணிகள் .............. .**

அ) 269 ஆ) 267 இ) 268 ஈ) 368 **விடை: இ) 268**

**5. வண்ணம் .............. வகைப்படும்.**

அ) மூன்று ஆ) நான்கு இ) எட்டு ஈ) ஐந்து **விடை: ஈ) ஐந்து**

**6. தாமசம் .............. குறிப்பது.**

அ) செறிவு ஆ) சமநிலை இ) சோம்பல் ஈ) போர் **விடை: இ) சோம்பல்**

**7. தவறானதை தேர்க.**

அ) குணம் - பத்து ஆ) வனப்பு - ஐந்து
இ) இனம் - மூன்று ஈ) சுவை - ஒன்பது **விடை: ஆ) வனப்பு - ஐந்து**

**8. பொருத்துக .**

| | | | |
|---|---|---|---|
| அ) | இராசசம் | 1. | அழகு |
| ஆ) | தாமசம் | 2. | அமைதி |
| இ) | வனப்பு | 3. | போர் |
| ஈ) | சத்துவம் | 4. | சோம்பல் |

அ) 3, 4, 1, 2 ஆ) 3, 4, 2, 1
இ) 2, 4, 3, 1 ஈ) 4, 1, 2, 3 **விடை: அ) 3, 4, 1, 2**

### சிறுவினா

**1. தூது இலக்கியம் பற்றி குறிப்பு வரைக.**

(i) தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கடவுளிடம் தன் காதலைத் தெரிவித்து வருமாறு தலைவி தூது அனுப்புவதாகவே தூது இலக்கியங்கள் இயற்றப்பட்டன.

(ii) தூதுவன் பெருமை, தலைவனின் சிறப்புக்கள், செல்லவேண்டிய வழி, தலைவனைக்காணும் வேளை, தூது செய்தி ஆகியவை இந்நூலில் அழகுற வருணிக்கப்படுகிறது. தமிழ் விடுதூதே மிகச் சிறந்த நூலாகும்.

(iii) மதுரைச் சொக்கநாதரிடம் காதலில் கொண்ட தலைவி தன் காதலைத் தெரிவித்து அவர் இசைவறிந்து வருமாறு தமிழைத் தூதனுப்பி வைப்பதாக இந்நூல் பாடப்பெற்றுள்ளது.

☆ ☆ ☆

அழுதென்று பேர்

www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


இயல் 1

அமுதென்று பேர்

# வளரும் செல்வம்

விரிவானம்

## மதிப்பீடு

### குறுவினா

1. **கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.**

(i) சாஃப்ட்வேர் (Software) – மென்பொருள்
(ii) ப்ரௌசர் (Browser) – உலவி
(iii) க்ராப் (Crop) – செதுக்கி
(iv) கர்சர் (Cursor) – ஏவி (அல்லது) சுட்டி
(v) சைபர்ஸ்பேஸ் (Cyberspace) – இணையவெளி

### சிறுவினா

1. **சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?**

**சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் பெற்ற மாற்றம் :**

| தமிழ் | கிரேக்கம் |
|---|---|
| எறிதிரை | எறுதிரான் |
| கலன் | கலயுகோய் |
| நீர் | நீரியோஸ், நீரிய |
| நாவாய் | நாயு |
| தோணி | தோணீஸ் |

2. **வளரும் செல்வம் – உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச்சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பட்டியலிடுக.**

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச்சொற்கள் |
|---|---|
| சாஃப்ட்வேர் (Software) | மென்பொருள் |
| ப்ரௌசர் (Browser) | உலவி |
| க்ராப் (Crop) | செதுக்கி |
| கர்சர் (Cursor) | ஏவி (அல்லது) சுட்டி |
| சைபர்ஸ்பேஸ் (Cyberspace) | இணையவெளி |
| சர்வர் (Server) | வையக விரிவு வலை வழங்கி |
| போல்டர் (Folder) | உறை |
| லேப்டாப் (Laptop) | மடிக்கணினி |


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



**தமிழ் எண்கள் அறிவோம்.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | க0/ய |

## கற்பவை கற்றபின்

1. **நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்களை அறிந்து எழுதுக.**

காலாண்டுத் தேர்வு 2019

| சொற்பட்டியல் | பிறமொழிச் சொற்கள் | நிகரான தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|
| வகுப்பு, புத்தகம், பிளாக் போர்டு, பேனா, பென்சில், நோட்டு | ப்ளாக் போர்டு (Black Board) | கரும்பலகை |
| நோட்டு, ஸ்கேல், ரப்பர், ஜியாமென்ரி பாக்ஸ், காம்பஸ், வாட்டர், பாட்டில் | பேனா, பென்சில், நோட்டு, ஸ்கேல், ஜியாமென்ரி பாக்ஸ், வாட்டர் பாட்டில், காம்பஸ் | எழுதுகோல், வரைகோல், குறிப்பேடு, அளவுகோல், வடிவியல் பெட்டி, தண்ணீர் புட்டி, குவி வட்டம். |

2. **உரையாடலை நிறைவு செய்க. அவற்றுள் இடம்பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

அருண் : ஹலோ! நண்பா!

**வணக்கம் நண்பா!**

நளன் : **எப்படி இருக்கின்றாய்? உன்னைப் பார்த்து நீண்ட நாட்களாகிவிட்டது.**

அருண் : ஆமாம்! டென் இயர்ஸ் ஆச்சு இல்லையா?

**ஆமாம். பத்து ஆண்டுகள் ஆயிற்று இல்லையா?**

நளன் : ஆமாம். நான் இப்ப மல்ட்டி நேஷனல் கம்பெனி ஒன்றில் பிராஜக்ட் மேனேஜரா இருக்கேன். நீ?

**ஆமாம். நான் இப்ப பன்னாட்டு நிறுவனம் ஒன்றில் திட்ட மேலாளராக இருக்கேன். நீ?**

அருண் : **நான் நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றேன்.**

நளன் : அந்த காலேஜ்லதான் என் தம்பி பஸ்டு இயர் படிக்கிறான்.

**அந்தக் கல்லூரியில்தான் என் தம்பி முதல் ஆண்டு படிக்கின்றான்.**

அருண் : **அப்படியா? அவன் பெயர் என்ன? நான் பார்த்துக் கொள்கிறேன்.**

நளன் : பை! பை!

**வருகிறேன்.**

### கூடுதல் நெடுவினா

அரையாண்டுத் தேர்வு 2019

1. **வளரும் செல்வம் – உரையாடல் கருத்தை சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

தமிழ்ச் சொற்கள் வழி தமிழர் நாகரிகத்தையும் வாழ்வையும் அறிய முடியும். சொற்கள் வரலாற்றைப் பேசுபவை. ஒவ்வொரு சொல்லிலும் இனத்தின், மொழியின் வரலாறு இருக்கிறது. சொற்கள் புலப்படுத்தும் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை விளக்கும் கட்டுரை வளரும் செல்வம்.

அமுதென்று பேர்

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



**கலைச் சொல் :**

புதியதாகக் கண்டறியும் அறிவியல் சாதனங்களுக்குக் கலைச்சொற்கள் கண்டறிந்துள்ளோம். சாப்ட்வேர், ப்ரௌசர், க்ராப், கர்சர், சைபர்ஸ்பேஸ், சர்வர், ஃபோல்டர், லேப்டாப் இவற்றிற்கு முறையே மென்பொருள், உலவி, செதுக்கி, ஏவி அல்லது சுட்டி, இணையவெளி, வையக விரிவுவலை வழங்கி, உறை, மடிக்கணினி எனக் கலைச்சொற்கள் கண்டறிந்துள்ளோம்.

**எண்ணிக்கை :**

கணிதத்தில் ஒன்று, பத்து, ஆயிரம் ஆகிய எண்ணிக்கைகளுக்கான தமிழ்ச்சொற்கள் இருப்பதுபோல் 1/160, 3/320 போன்ற பின்ன இலக்கங்களுக்கு முந்திரி, அரைக்காணி, அரைக்காணி முந்திரி, காணி, கால் வீசம் எனத் தமிழ்ச் சொற்களும் உள்ளன.

**வேற்றுமொழிச் சொற்கள் :**

பிறமொழிச் சொற்களைத் தமிழ்மொழி பெறுவதுபோல் வேற்று மொழிகள் தமிழிலிருந்து பெற்றுள்ளன. கடல்துறையில் நாவாய், வங்கம், தோணி, கலம் போன்ற பலவகையான கடற்கலன்களைத் தமிழர்கள் இயக்கியதாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தமிழ்ச்சொல்லாகிய நாவாய் ஆங்கிலத்தில் நேவி என்றும், கிரேக்க மொழியில் எறிதிரை – எறுதிரான், கலன் – கலயுகோய், நீர் – நீர்யோஸ், நீரிய, நாவாய் – நாயு, தோணி – தோணீஸ் என்றும் தமிழ்ச்சொற்கள் இடம் பெற்றுள்ளன.

**கவிதையியலில் முன்னேற்றம் :**

கவிதை சார்ந்த சொற்களைத் தமிழிலும் கிரேக்க மொழியிலும் ஒப்பாகக் காணமுடிகிறது. பா என்னும் தமிழ்ச்சொல் பாய்யியோனா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வெண்பாவிற்குரிய செப்பலோசை கிரேக்கத்தில் சாப்போயோ என அழைக்கப்படுகிறது. இது கிரேக்கத்திலிருந்து இலத்தீன் மொழிக்கு வந்து பின் ஆங்கிலத்தில் சேப்பிக் ஸ்டேன்சா என்று வழங்கப்படுகிறது.

**நாம் செய்ய வேண்டியவை :**

வளரும் அறிவியல் துறைக் கலைச்சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும். தமிழில் உள்ள தத்துவம், அரசியல் ஆகிய துறை நூல்களைப் பிறமொழிகளுக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

**முடிவுரை :**

மருத்துவம், பொறியியல், கணினி, விண்வெளி போன்ற பிறதுறைகளின் பதிவுகளை நம் மொழிக்குக் கொண்டுவர நாமும் நம்மாலான பணிகளைத் தொடர்வோம். புதிய சொல்வளத்தைப் பெருக்குவோம்.

☆ ☆ ☆

இயல் 1

அமுதென்று பேர்

# தொடர் இலக்கணம்

கற்கண்டு

## மதிப்பீடு

### குறுவினா

1. **செய்வினையைச் செயப்பாட்டுவினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் படு, உண், பெறு போன்றவை.

**எடுத்துக்காட்டு :** கோவலன் கொலையுண்டான்.
மரம் அறிவழகனால் வெட்டப்பட்டது.


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



**2. வீணையோடு வந்தாள். கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.**

இரண்டு சொற்களுக்கு இடையே ஆறு வேற்றுமை உருபுகளும் வருவது வேற்றுமை எனப்படும்.

(i) **வீணையோடு வந்தாள்** : மூன்றாம் வேற்றுமைத் தொடர்.

(ii) **கிளியே பேசு** : விளித்தொடர் காலாண்டுத் தேர்வு 2019

## சிறுவினா

**1. தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.**

| தன்வினை | பிறவினை |
|---|---|
| வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும். | வினையின் பயன் எழுவாயையன்றிப் பிறிதொன்றைச் சேருமாயின் அது பிறவினை எனப்படும். |
| **எடுத்துக்காட்டு :** கந்தன் கண்டான். 'கண்டான்' என்ற வினை கந்தன் என்னும் எழுவாயைச் சேர்கிறது | **எடுத்துக்காட்டு :** கந்தன் காண்பித்தான். 'காண்பித்தான்' என்ற வினை கந்தன் என்னும் எழுவாயைச் சேராமல் வேறொருவரைச் சேர்கிறது. |
| நட | நடத்து |
| அடங்கு | அடக்கு |
| திருந்தினான் | திருத்தினான் |
| ஆடினான் | ஆட்டினான் |
| மாறுவாள் | மாற்றுவாள் |

## தமிழ் எண்களில் எழுதுக.

| | |
|---|---|
| பன்னிரண்டு | கஉ |
| பதின்மூன்று | கங |
| நாற்பத்து மூன்று | சங |
| எழுபத்தெட்டு | எஅ |
| தொண்ணூறு | கூ0 |

## கற்பவை கற்றபின்

**1. தொடர்களை மாற்றி உருவாக்குக.**

**அ) பதவியை விட்டு நீக்கினான். - இத்தொடரைத் பிறவினைத் தொடராக மாற்றுக.**

விடை: பதவியை விட்டு நீங்கச் செய்தான்.

**ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர். - இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.**

விடை: மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

**இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே. - இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.**

விடை: தமிழ்த்தேனை உண்பேன்.

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



**ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுத்துள்ளனர். - இத்தொடரைச் செயப்பாட்டுவினைத் தொடராக மாற்றுக.**

விடை: திராவிட மொழிகள் மூன்று மொழிக் குடும்பங்களாய்ப் பகுக்கப்பட்டுள்ளன.

**உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார். - இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.**

விடை: நிலவனைச் சிறந்த பள்ளியில் படிக்க வைத்தார்.

**2. சொற்களைத் தொடர்களாக மாற்றுக.**

**அ) மொழிபெயர் - தன்வினை, பிறவினைத் தொடர்களாக.** காலாண்டுத் தேர்வு 2019

(i) **தன்வினை** : ஜி.யு.போப் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

(ii) **பிறவினை** : ஆசிரியர் மாணவரிடம் ஆங்கிலப் பத்தியைக் கொடுத்து தமிழில் மொழிபெயர்ப்பித்தார்.

**ஆ) பதிவுசெய் - செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.**

(i) **செய்வினை** : கண்ணன் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தன் விவரங்களைப் பதிவு செய்தான்.

(ii) **செயப்பாட்டுவினை** : வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கண்ணனின் விவரங்கள் கண்ணனால் பதிவு செய்யப்பட்டன.

**இ) பயன்படுத்து - தன்வினை, பிறவினைத் தொடர்களாக.**

(i) **தன்வினை** : மின்சாரத்தை அளவாகப் பயன்படுத்தினான்.

(ii) **பிறவினை** : மின்சாரத்தை அளவாகப் பயன்படுத்தச் செய்தான்.

**ஈ) இயங்கு - செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.**

(i) **செய்வினை** : கண்ணன் மகிழுந்தை இயக்கினான்.

(ii) **செயப்பாட்டுவினை** : மகிழுந்து கண்ணனால் இயக்கப்பட்டது.



**3. பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.**
**(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களைக், நம்மை, வாழ்வியல் அறிவைக்)**

அ) தமிழ் ........................................ கொண்டுள்ளது. விடை: **செவ்விலக்கியங்களைக்**

ஆ) நாம் ........................................ வாங்கவேண்டும். விடை: **தமிழிலக்கிய நூல்களை**

இ) புத்தகங்கள் ........................................ கொடுக்கின்றன. விடை: **வாழ்வியல் அறிவைக்**

ஈ) நல்ல நூல்கள் .................................. நல்வழிப்படுத்துகின்றன. விடை: **நம்மை**

**4. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.**
**(நல்ல, பெரிய, இனிய, கொடிய)**

அ) எல்லோருக்கும் ........................................ வணக்கம். விடை: **இனிய**

ஆ) அவன் ........................................ நண்பனாக இருக்கிறான். விடை: **நல்ல**

இ) ........................................ ஓவியமாக வரைந்து வா. விடை: **பெரிய**

ஈ) ........................................ விலங்கிடம் பழகாதே. விடை: **கொடிய**

**5. பொருத்தமான வினையடைகளைத் தேர்வு செய்க.**
**(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)**

அ) ஊர்தி ........................................ சென்றது. விடை: **மெதுவாகச்**

ஆ) காலம் ........................................ ஓடுகிறது. விடை: **வேகமாக**

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை.................................. காட்டுகிறது. விடை: **அழகாகக்**

ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் ............ காட்டு. விடை: **பொதுவாகக்**


orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



**6.** **அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.**

**அ)** **நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். (வினாத்தொடராக)**

**விடை:** நம் முன்னோர் எதனோடு இயைந்த வாழ்வு நடத்தினர்?

**ஆ)** **இசையின்றி அமையாது பாடல். (உடன்பாட்டுத் தொடராக)**

**விடை:** இசையோடு அமைவது பாடல்.

**இ)** **நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? (கட்டளைத் தொடராக)**

**விடை:** நான் கூறியதைப் போல, நீ இதைச் செய்.

**7.** **வேர்ச்சொற்களை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.**

**அ)** **தா (உடன்பாட்டுவினைத் தொடர், பிறவினைத் தொடர்)**

(i) **உடன்பாட்டுவினைத் தொடர்** : நான் புத்தகத்தைத் தந்தேன்.

(ii) **பிறவினைத் தொடர்** : நான் புத்தகத்தைத் தருவித்தேன்.

**ஆ)** **கேள் (வினாத் தொடர்)**

**வினாத் தொடர்:** யாரிடம் கேட்டாள்?

**இ)** **கொடு (செய்தித் தொடர், கட்டளைத் தொடர்)**

(i) **செய்தித் தொடர்:** அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தான்.

(ii) **கட்டளைத் தொடர்:** என்னிடம் கொடு

**ஈ)** **பார் (செய்வினைத் தொடர், செயப்பாட்டுவினைத் தொடர், பிறவினைத் தொடர்)**

(i) **செய்வினைத்தொடர்:** அனிதா படம் பார்த்தாள்.

(ii) **செயப்பாட்டுவினைத் தொடர்:** படம் அனிதாவால் பார்க்கப்பட்டது.

(iii) **பிறவினைத் தொடர்:** குமரன் படத்தைப் பார்க்க வைத்தான்.

**8.** **சிந்தனை வினா**

**அ)** **அவை யாவும் இருக்கின்றன.**
**அவை யாவையும் இருக்கின்றன.**
**அவை யாவும் எடுங்கள்.**
**அவை யாவையும் எடுங்கள்.**
**அவை யாவற்றையும் எடுங்கள்.**

**மேற்கண்ட சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக.**

(i) **அவை யாவும் இருக்கின்றன :** இத்தொடர் தவறானது. அவை அனைத்தும் இருக்கின்றன எனப் பன்மைப் பொருளில் அமைந்துள்ளது.

(ii) **அவை யாவையும் இருக்கின்றன :** இத்தொடர் சரியானது. அவை அனைத்தும் இருக்கின்றன எனப் பன்மைப் பொருளில் சரியாக அமைந்துள்ளது.

(iii) **அவை யாவும் எடுங்கள் :** இத்தொடர் சரியான தொடரன்று.'யாவும்' என்பதற்குப் பொருந்தும் பயனிலை அமையவில்லை.

(iv) **அவை யாவையும் எடுங்கள் :** இத்தொடர் சரியான தொடரன்று. 'யாவையும்' என்பதற்குப் பொருந்தும் பயனிலை அமையவில்லை.

(v) **அவை யாவற்றையும் எடுங்கள் :** இத்தொடர் சரியானது. 'எடுங்கள்' என்பதற்குப் பொருந்தும் செயப்படுபொருள் அமைந்துள்ளது.





www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



**ஆ) நீங்கள் ஒரு நாளிதழில் பணிபுரிகிறீர்கள். அங்குப் புதிய வார இதழ் ஒன்று தொடங்க விருக்கிறார்கள். அதற்காக அந்நாளிதழில் விளம்பரம் தருவதற்குப் பொருத்தமான சொற்றொடர்களை வடிவமைத்து எழுதுக.**




**இ) சொற்றொடர் வகைகளை அறிந்து, அவை எவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகின்றன என்பதைப் பதிவு செய்க.**

**நாம் அன்றாடம் பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படும் தொடர்களில் சில:**

| | தொடர் வகைகள் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| (i) | செய்தித் தொடர் | திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். |
| (ii) | வினாத் தொடர் | நேற்று ஏன் பள்ளிக்கு வரவில்லை? |
| (iii) | உணர்ச்சித் தொடர் | என்னே! தாஜ்மகாலின் அழகு. |
| (iv) | கட்டளைத் தொடர் | கவனமாகச் செல். |
| (v) | கலவைத் தொடர் | கமலா நன்றாகப் படித்ததால் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றாள். |
| (vi) | செய்வினைத் தொடர் | கமலா படம் வரைந்தாள். |
| (vii) | செயப்பாட்டு வினைத் தொடர் | படம் கமலாவால் வரையப்பட்டது. |
| (viii) | தன்வினைத் தொடர் | இளவரசி இலக்கணம் கற்றாள். |
| (ix) | பிறவினைத் தொடர் | இளவரசி இலக்கணம் கற்பித்தாள். |
| (x) | நேர்கூற்றுத் தொடர் | தந்தை, "மகனே, நன்றாகப் படி" என்று கூறினார். |
| (xi) | அயற்கூற்றுத் தொடர் | கமலா இளவரசியிடம், தான் மறுநாள் ஊருக்குச் செல்வதாகக் கூறினாள். |

**ஈ) வந்திருப்பவர்கள் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தொடர் ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பாக இருந்தாலும் மொழி மரபை இத்தொடரில் பேணுகிறோமா?**

தமிழ்மொழியில் தொடர் எழுவாய், செயப்படுபொருள் பயனிலை என்ற வரிசையில் அமையும். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற வரிசையிலும் அமையும். இத்தொடரைப் போன்று ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்படும்போது மொழி மரபைப் பேணுகிறோம்.

## பகுபத உறுப்பிலக்கணம்

பதம்(சொல்) இருவகைப்படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும். பிரிக்கக் கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இது பெயர் பகுபதம், வினைப்பகுபதம் என இரண்டு வகைப்படும்.



www.surabooks.com



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| பகுதி (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். |
| விகுதி (இறுதிநிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும். |
| இடைநிலை | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| சந்தி | பகுதியையும், பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். |
| சாரியை | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| விகாரம் | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

**பகுதி :**

| | | | |
|---|---|---|---|
| ஊரன் | – ஊர், | வரைந்தான | – வரை |
| நடிகன் | – நடி, | மடித்தார் | – மடி |
| பார்த்தான் | – பார், | மகிழ்ந்தாள் | – மகிழ் |

**விகுதி :**

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| பாடுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து,று |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம் |
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வந்து, தேடி | உ, இ – வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயல் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி,பு... |

**இடைநிலைகள் :**

| | | |
|---|---|---|
| வென்றார் | ற் – இறந்த கால இடைநிலை | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ், க் – எதிர்கால இடைநிலை | ப்,வ்,க் |
| பறிக்காதீர் | ஆ – எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் – பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

**சந்தி :**

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் – சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் – உடம்படுமெய் சந்தி | ய், வ் |

அழகின்று பேர்



orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


**சாரியை :**

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் – சாரியை | அன், ஆன், இன், இல், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் |

**எழுத்துப்பேறு :**

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும், 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு.

**(எ.கா.)** **வந்தனன் :** வா(வ்) + த்(ந்) + த் + அன் + அன்

வா – பகுதி ('வ' ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
அன் – சாரியை
அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

**செய்யாதே :** செய் + ய் + ஆ + த் + ஏ

செய் – பகுதி
ய் – சந்தி
ஆ – எதிர்மறை இடைநிலை
த் – எழுத்துப்பேறு
ஏ – முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி.

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **நான் பாடத்தைப் படித்தேன் – இத்தொடரில் உள்ள அமைப்பு** ※

அ) எழுவாய், செயப்படுபொருள், பயனிலை
ஆ) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்
இ) செயப்படுபொருள், பயனிலை, எழுவாய்
ஈ) பயனிலை, செயப்படுபொருள், எழுவாய் **விடை: அ) எழுவாய், செயப்படுபொருள், பயனிலை**

2. **'வந்தான் மன்னன்' என்பது ....................** ※

அ) எழுவாய் தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர்
இ) வேற்றுமைத் தொடர் ஈ) செய்தித்தொடர்

**விடை: ஆ) வினைமுற்றுத் தொடர்**

3. **பெயர்ப் பயனிலைக்கு ஏற்ற தொடர் எது?** ※

அ) சொன்னவள் கலா ஆ) கலா சொன்னாள்
இ) சொன்னவள் கலாவா? ஈ) சொன்னாள் கலா **விடை: அ) சொன்னவள் கலா**

காலாண்டுத் தேர்வு 2019

4. **விளித்தொடரில் ______ மிகாது.**

அ) மெய்யெழுத்து ஆ) உயிர் எழுத்து
இ) வல்லினம் ஈ) மெல்லினம் **விடை: இ) வல்லினம்**

**நிரப்புக.**

1. ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தை ............ என்கிறோம். **விடை: பயனிலை**
2. செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை............ **விடை: செய்வினை** காலாண்டுத் தேர்வு 2019




orders@surabooks.com Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



3. பந்தை ............ என்பது பிறவினை. **விடை:** உருட்டினான்

4. குமரன் நல்ல பையன். இதில் நல்ல என்பது ............ ஆகும். **விடை:** பெயரடை

5. வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது ............ எனப்படும். **விடை:** தன்வினை

6. சொற்றொடர் எழுதுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லே ............ ஆகும். **விடை:** எழுவாய்

## குறுவினா

1. **மரத்தை வெட்டினான் நனி வல்லவன் - எவ்வகைத் தொடர்?** காலாண்டுத் தேர்வு 2019

   மரத்தை வெட்டினான் - செய்வினைத் தொடர்
   நனி வல்லவன் - பெயர் பயனிலைத் தொடர்

2. **அரசன் கோவில் கட்டினான் - (செயப்பாட்டு வினையாக மாற்றுக.)** காலாண்டுத் தேர்வு 2019

   கோவில் அரசனால் கட்டப்பட்டது.

## சிறுவினா

1. **தன்வினை, பிறவினை சான்றுடன் விளக்குக.**

   **தன்வினை** : வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும்.
   **சான்று** : பந்து உருண்டது.
   **பிறவினை** : வினையின் பயன் எழுவாயையன்றிப் பிறிதொன்றைச் சேருமாயின் பிறவினை எனப்படும்.
   **சான்று** : பந்தை உருட்டினான்.

# மொழியை ஆள்வோம்

## மொழிபெயர்க்க.

1. Linguistics - மொழியியல்
2. Literature - இலக்கியம்
3. Philologist - மொழியறிவியலாளர்
4. Polyglot - பன்மொழியாளர் (காலாண்டுத் தேர்வு 2019)
5. Phonologist - ஒலிச் சின்ன வல்லுநர்
6. Phonetics - ஒலியியல்

## அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் .................(திகழ்) **விடை:** திகழ்கிறது
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ..............(கலந்துகொள்) **விடை:** கலந்துகொள்வாள்
3. உலகில் மூவாயிரம் மொழிகள் ............... (பேசு) **விடை:** பேசுகின்றனர்
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ................(செல்) **விடை:** செல்கின்றனர்
5. தவறுகளைத் ..................(திருத்து) **விடை:** திருத்துகிறான்

## வடிவம் மாற்றுக.

**பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக.**

மருதூர் அரசு மேல்நிலைப்பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


"உள்ளங்கையில் உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜுன் திங்கள், பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும் அழைக்கின்றோம்.

**விடை:**

**அறிவிப்புப் பலகை**

அரசு மேனிலைப் பள்ளி
மருதூர்.
நூல் வெளியீட்டு விழா,

வணக்கம்! இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப் பணியை வழங்கி வரும் நம் பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. நம் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த "உள்ளங்கை உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜுன், திங்கள் பிற்பகல் 3:00 மணியளவில் நடைபெற உள்ளது. (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார்.

மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

பள்ளி நிருவாகம்

**தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.**

1. இளமையில் கல்வி **முதுமையில் இன்பம்**
2. சித்திரமும் கைப்பழக்கம் **செந்தமிழும் நாப்பழக்கம்**
3. கல்லாடம் படித்தவரோடு **இணக்கமாக இரு**
4. கற்றோர்க்குச் சென்ற **இடமெல்லாம் சிறப்பு**

**கடிதம் எழுதுக.**

**உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின், 'கால்முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.** ※

காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019

சென்னை.
20-06-2020.

அன்புள்ள நண்பா,

நான் இங்கு நலமாக இருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்? உன் அண்ணன், அப்பா, அம்மா மற்றும் தாத்தா அனைவரும் நலமாக உள்ளனரா?

என்னுடைய பிறந்த நாள் பரிசாக நீ அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் மிகவும் நன்றாக உள்ளது. அதில் உள்ள எண்பது கதைகளையும் படித்தேன். அக்கதைகளைப் படிப்பதற்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. அதனால் புத்தகம் என் கைக்கு வந்து ஒரு மணி நேரத்திற்குள் படித்து முடித்துவிட்டேன். பிறகு என் தங்கைக்கும் அக்கதைகளைச் சொன்னேன்.

இந்நூலாசிரியர் இந்நூலைப் புதுவிதமாக உருவாக்கியுள்ளார். நாட்டுப்புற இலக்கியம் போன்று உலகமெங்கும் உள்ள முப்பது பழங்குடியினர்கள் சொன்ன கதைகளிலிருந்து தேர்வு செய்து இத்தொகுப்பினை உருவாக்கியுள்ளார்.

இந்நூலில் உள்ள கதைகள் இயற்கையாக நிகழ்கின்ற நிகழ்வுகளுக்கெல்லாம் ஒரு காரணம் இருப்பது போன்று அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் விரும்பி படிக்கும்படி எளிய சொற்களால் சிறு சிறு கதைகளாக அமைந்துள்ளது.

ஆப்பிரிக்கா கதை, கொலம்பியா நாட்டுக்கதை, நியூசிலாந்து கதை, சீனா கதை எனப் பல கதைகள் கூறப்பட்டுள்ளது.





www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



எனக்கு இந்நூலில் உள்ள கதைகள் மிகவும் பிடித்திருந்தது. உனக்கு விடுமுறை உள்ளபோது எங்கள் வீட்டிற்கு வா. உங்கள் வீட்டில் உள்ள அனைவரையும் நான் விசாரித்ததாகக் கூறு. இக்கடிதம் கிடைத்ததும் எனக்கு நீ கடிதம் எழுது.

இப்படிக்கு,
உன் அன்புள்ள,
கபிலன்.

**உறைமேல் முகவரி**

**பெறுநர்:**
க.பிரபு,
எண் –15, சித்திரை தெரு,
மதுரை.

**நயம் பாராட்டுக.**

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

– ம.இலெ.தங்கப்பா

**திரண்ட கருத்து:**

விரிந்து இருக்கின்ற நெடிய வானத்தில், பரந்த கடற்பரப்பில், விண்ணைத் தொடுமாறு உயர்ந்து நிற்கின்ற பெரிய மலையில், பள்ளத்தாக்குகளில் பொழிகின்ற நீரருவிச் சோலையில், காடுகளில், புல்வெளியில் பயிர்விளையும் நல்ல வயலில், விலங்கினங்களில், பறவையினங்களில் மற்றும் கண்ணுக்குத் தெரிகின்ற எல்லாப் பொருள்களிலெல்லாம் சிறப்புடன் விளங்கி உள்ளத்தில் திகட்டாத நுண்மையான பாட்டே, தூய்மையான ஊற்றே, அழகு என்ற சொல்லத்தக்க பேரொழுங்கே, மெய்யே, மக்களின் உள்ளத்திலும் நீ குடியிருக்க வேண்டுமென்று இயற்கையை வேண்டுகிறார் ஆசிரியர்.

**மையக் கருத்து:**

இயற்கையின் வளத்தையும் அழகையும் மக்களின் உள்ளங்களில் குடியிருக்க வேண்டுமென ஆசிரியர் கூறுகிறார்.

**மோனைத்தொடை :** அடியிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி வருவது மோனை.

விரிகின்ற – விண்ணோக்கு
பொழிகின்ற – புல்வெளியில்
தெரிகின்ற – தெவிட்டாத
அழகு – அகத்திலும்

**இயைபுத்தொடை :** அடிகளிலோ சீர்களிலோ கடைசி எழுத்தோ சொல்லோ ஒன்றி வருவது இயைபுத் தொடை.

கடற்பரப்**பில்**, பள்ளத்தாக்**கில்**, காட்**டில்**, புள்**ளில்**, நெஞ்**சில்**

**அணிநயம் :** இயற்கையழகு எங்கெல்லாம் விரவியுள்ளது என்பதை ஆசிரியர் உள்ளதை உள்ளவாறு இயல்பாகக் கூறியுள்ளதால் இதில் இயல்பு நவிற்சியணி பயின்று வந்துள்ளது.



www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



**நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க.**

**உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.** காலாண்டுத் தேர்வு 2019

நிகழ்ச்சி நிரல்

# தமிழ் இலக்கிய மன்றம்

திருவெற்றியூர்,

சென்னை - 600 019

## உலகத் தமிழ்மொழி நாள்
## இலக்கிய நிகழ்ச்சி

நாள்:
21.02.2020 புதன்கிழமை
காலை 9.30 மணி

இடம் :
அரசு மேனிலைப் பள்ளி, திருவெற்றியூர்,
சென்னை - 600 019.

தலைப்பு :

**உலக தமிழ்த் தாய் மொழி நாள்**

சிறப்புரை :
முனைவர். திரு. தமிழ்குமரன்

நன்றியுரை: திரு. ந. விமலாராணி தலைமையாசிரியை,
அரசு மேனிலைப் பள்ளி, சென்னை.

அனைவரும் வருக.
தேன் தமிழ் பருக.

## மொழியோடு விளையாடு

**அந்தாதிச் சொற்களை உருவாக்குக.**

**அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக.**

வரிசையாக
இனிப்பு
கடம்பு
விருது
புளிப்பு
புரட்சி
குருவி
துவர்ப்பு
புவி
அத்தி
சிறுமை
விரும்பு
புகழ்ச்சி
விருப்பு
திகைப்பு
புகை
மைனா
சிறகு
புன்னகை
புகழ்ச்சி
கைவீசு
குடிமை
கைப்பேசி
சிரிப்பு
சுமை
மைனா
சிந்தனை
புன்னகை
மைனா
கைப்பேசி
சிறப்பு
புதுமை
மைனா

**அகராதியில் காண்க.**

1. நயவாமை – விரும்பாமை, புகழாமை
2. கிளத்தல் – கூறுதல்
3. கேழ்பு – நன்மை
4. செம்மல் – பெருமையிற் சிறந்தவன்.
5. புரிசை – மதில், மதிர்சுவர்





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



**கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.**

| வா | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | வந்தேன் | **வருகிறேன்** | **வருவேன்** |
| நாங்கள் | **வந்தோம்** | **வருகிறோம்** | வருவோம் |
| நீ | **வந்தாய்** | வருகிறாய் | **வருவாய்** |
| நீங்கள் | வந்தீர்கள் | **வருகிறீர்கள்** | **வருவீர்கள்** |
| அவன் | **வந்தான்** | வருகிறான் | **வருவான்** |
| அவள் | **வந்தாள்** | **வருகிறாள்** | **வருவாள்** |
| அவர் | வந்தார் | **வருகிறார்** | **வருவார்** |
| அவர்கள் | **வந்தார்கள்** | **வருகிறார்கள்** | **வருவார்கள்** |
| அது | **வந்தது** | **வருகிறது** | வரும் |
| அவை | **வந்தன** | வருகின்றன | **வரும்/வருவன** |

**தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி மேற்கண்ட கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.**

| தா | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | தந்தேன் | தருகிறேன் | தருவேன் |
| நாங்கள் | தந்தோம் | தருகிறோம் | தருவோம் |
| நீ | தந்தாய் | தருகிறாய் | தருவாய் |
| நீங்கள் | தந்தீர்கள் | தருகிறீர்கள் | தருவீர்கள் |
| அவன் | தந்தான் | தருகிறான் | தருவான் |
| அவள் | தந்தாள் | தருகிறாள் | தருவாள் |
| அவர் | தந்தார் | தருகிறார் | தருவார் |
| அவர்கள் | தந்தார்கள் | தருகிறார்கள் | தருவார்கள் |
| அது | தந்தது | தருகிறது | தரும் |
| அவை | தந்தன | தருகின்றன | தரும்/தருவன |

| காண் | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | கண்டேன் | காண்கிறேன் | காண்பேன் |
| நாங்கள் | கண்டோம் | காண்கிறோம் | காண்போம் |
| நீ | கண்டாய் | காண்கிறாய் | காண்பாய் |
| நீங்கள் | கண்டீர் | காண்கிறீர்கள் | காண்பீர்கள் |
| அவன் | கண்டான் | காண்கிறான் | காண்பான் |
| அவள் | கண்டாள் | காண்கிறாள் | காண்பாள் |
| அவர் | கண்டார் | காண்கிறார் | காண்பார் |
| அவர்கள் | கண்டார்கள் | காண்கிறார்கள் | காண்பார்கள் |
| அது | கண்டது | காண்கிறது | காணும் |
| அவை | கண்டன | காண்கின்றன | காணும்/காண்பன |

அழுதென்று பேர்

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


| பெறு | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | பெற்றேன் | பெறுகிறேன் | பெறுவேன் |
| நாங்கள் | பெற்றோம் | பெறுகிறோம் | பெறுவோம் |
| நீ | பெற்றாய் | பெறுகிறாய் | பெறுவாய் |
| நீங்கள் | பெற்றீர்கள் | பெறுகிறீர்கள் | பெறுவீர்கள் |
| அவன் | பெற்றான் | பெறுகிறான் | பெறுவான் |
| அவள் | பெற்றாள் | பெறுகிறாள் | பெறுவாள் |
| அவர் | பெற்றார் | பெறுகிறார் | பெறுவார் |
| அவர்கள் | பெற்றார்கள் | பெறுகிறார்கள் | பெறுவார்கள் |
| அது | பெற்றது | பெறுகிறது | பெறும் |
| அவை | பெற்றன | பெறுகின்றன | பெறும்/பெறுவன |

| நீந்து | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | நீந்தினேன் | நீந்துகிறேன் | நீந்துவேன் |
| நாங்கள் | நீந்தினோம் | நீந்துகிறோம் | நீந்துவோம் |
| நீ | நீந்தினாய் | நீந்துகிறாய் | நீந்துவாய் |
| நீங்கள் | நீந்தினீர்கள் | நீந்துகிறீர்கள் | நீந்துவீர்கள் |
| அவன் | நீந்தினான் | நீந்துகிறான் | நீந்துவான் |
| அவள் | நீந்தினாள் | நீந்துகிறாள் | நீந்துவாள் |
| அவர் | நீந்தினார் | நீந்துகின்றார் | நீந்துவார் |
| அவர்கள் | நீந்தினார்கள் | நீந்துகிறார்கள் | நீந்துவார்கள் |
| அது | நீந்தியது | நீந்துகின்றது | நீந்தும் |
| அவை | நீந்தின | நீந்துகின்றன | நீந்தும்/நீந்துவன |

| பாடு | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | பாடினேன் | பாடுகிறேன் | பாடுவேன் |
| நாங்கள் | பாடினோம் | பாடுகிறோம் | பாடுவோம் |
| நீ | பாடினாய் | பாடுகிறாய் | பாடுவாய் |
| நீங்கள் | பாடினீர்கள் | பாடுகிறீர்கள் | பாடுவீர்கள் |
| அவன் | பாடினான் | பாடுகிறான் | பாடுவான் |
| அவள் | பாடினாள் | பாடுகிறாள் | பாடுவாள் |
| அவர் | பாடினார் | பாடுகிறார் | பாடுவார் |
| அவர்கள் | பாடினார்கள் | பாடுகிறார்கள் | பாடுவார்கள் |
| அது | பாடியது | பாடுகிறது | பாடும் |
| அவை | பாடின | பாடுகின்றன | பாடும்/பாடுவன |




orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores


| கொடு | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நான் | கொடுத்தேன் | கொடுக்கிறேன் | கொடுப்பேன் |
| நாங்கள் | கொடுத்தோம் | கொடுக்கிறோம் | கொடுப்போம் |
| நீ | கொடுத்தாய் | கொடுக்கிறாய் | கொடுப்பாய் |
| நீங்கள் | கொடுத்தீர்கள் | கொடுக்கிறீர்கள் | கொடுப்பீர்கள் |
| அவன் | கொடுத்தான் | கொடுக்கிறான் | கொடுப்பான் |
| அவள் | கொடுத்தாள் | கொடுக்கிறாள் | கொடுப்பாள் |
| அவர் | கொடுத்தார் | கொடுக்கிறார் | கொடுப்பார் |
| அவர்கள் | கொடுத்தார்கள் | கொடுக்கிறார்கள் | கொடுப்பார்கள் |
| அது | கொடுத்தது | கொடுக்கிறது | கொடுக்கும் |
| அவை | கொடுத்தன | கொடுக்கின்றன | கொடுப்பன |

**அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமான தொடர் அமைக்க. (திடலில், போட்டியில், மழையில், வேகமாக, மண்ணை)**

(எ.கா) நான் திடலில் ஓடினேன் (தன்வினை)
திடலில் மிதிவண்டியை ஓட்டினேன் (பிறவினை)

| எழுவாய்/பெயர் | வினை அடி | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|
| காவியா | வரை | போட்டியில் வரைந்தாள் | போட்டியில் வரைவித்தாள் |
| கவிதை | நனை | மழையில் நனைந்தேன் | மழையில் நனைவித்தேன் |
| இலை | அசை | வேகமாக அசைந்தது | வேகமாக அசைவித்தது |
| மழை | சேர் | மண்ணை சேர்ந்தது | மண்ணைச் சேர்ப்பித்தது |

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**மீன் தொட்டி**

சூரிய வெளிச்சம்
முதுகை தொடும்
வெப்பத்தை அறியா
தொட்டி மீன்களே!
தன்னிடம் இருக்கும்
குறுகிய எல்லையை
தொலைவாக எண்ணி
நீந்திக் கொண்டிருக்கும்!
உன்னிடம் எவ்வாறு கூறுவேன்?
கடல் அன்னையைப் பற்றி...

1. செம்மறி ஆட்டுக்கூட்டமாய் இருக்காமல் சிந்தித்து செயல்பட வேண்டும்.
2. பாச வலைக்குள் சிக்கிக்கொண்டு ஏங்கி நிற்கக் கூடாது. நாற்றும் பிடுங்கி நட்டால்தான் வளர்கிறது. இதை உணர்ந்து நட.
3. வாய்ப்புகள் வந்து கதவைத் திறக்கும் போது தாழிட்டுக் கொள்ளக் கூடாது.
4. தனியாக நின்று சாதித்துக்காட்டு; உன் வெற்றியை அனைவரிடமும் பகிர்ந்து கொள்.
5. சுதந்திரமாய் இரு, ஆனால் கட்டுப்பாட்டுடன் இரு.

அழுதென்று பேர்


www.surabooks.com

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



### செயல் திட்டம்

**நீங்கள் வாழும் பகுதியில் மக்கள் பேசும் மொழிகளைப் பட்டியலிட்டு அம்மொழி பேசப்படுகின்ற இடங்களை நிலப்படத்தில் வண்ணமிட்டுக் காட்டுக.**

நான் வாழும் பகுதியில் மக்கள் பேசும் மொழிகள்.

| மொழி | இடம் |
|---|---|
| 1. தமிழ் | தமிழ்நாடு |
| 2. தெலுங்கு | ஆந்திர மாநிலம் |
| 3. கன்னடம் | கர்நாடகம் |
| 4. மலையாளம் | கேரளா |




## நிற்க அதற்குத் தக

**உங்களுடைய நாட்குறிப்பில் இடம் பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| திங்கள் | வருத்தம் தெரிவிக்கிறேன். பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார். |
| செவ்வாய் | என் தங்கையுடன் சண்டையிடாமல் சமாதானமாகப் பேசினேன். இருவரும் சேர்ந்து விளையாடினோம். |
| புதன் | என் வீட்டிற்கு உறவினர் வந்தனர். அவர்களை வரவேற்றேன். நாற்காலியில் அமரச் சொன்னேன். தண்ணீர் கொடுத்தேன். |
| வியாழன் | அம்மா மருத்துவமனை சென்றிருந்தார். அவர்கள் வருவதற்குள் வீட்டில் உள்ள வேலைகளைச் செய்து முடித்தேன். அப்பா என்னைப் பாராட்டினார். |
| வெள்ளி | வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன். அம்மா பாராட்டினார். |
| சனி | காலையில் அப்பாவுடன் நடைப் பயிற்சி செய்தேன். அப்பாவின் நண்பர் என்னைப் பற்றி புகழ்ந்து பேசினார். |
| ஞாயிறு | அப்பாவின் இரு சக்கர வாகனத்தைச் சுத்தம் செய்தேன். வீட்டில் சன்னல், கதவு போன்றவற்றைத் துடைத்தேன். புத்தகங்களை அடுக்கி வைத்தேன். |

### கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. உருபன் – Morpheme | 3. ஒப்பிலக்கணம் – Comparative Grammar காலாண்டுத் தேர்வு 2019 |
| 2. ஒலியன் – Phoneme | 4. பேரகராதி – Lexicon |

### அறிவை விரிவு செய்

காலாண்டுத் தேர்வு 2019

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் – ராபர்ட் கால்டுவெல்
2. மொழிப்பெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும் – மணவை முஸ்தபா
3. தமிழ்நடைக் கையேடு
   மாணவர்களுக்கான தமிழ் – என்.சொக்கன்

☆ ☆ ☆





orders@surabooks.com Ph:9600175757 / 8124201000

This is Only for Sample For Full Book Order Online or Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு

**நேரம் : 45 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (5 × 1 = 5)

1. தமிழ்விடு தூது ................ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. உலகத் தாய்மொழி தினம் .........................
   அ) மார்ச் 21 ஆ) பிப்ரவரி 21
   இ) ஏப்ரல் 21 ஈ) டிசம்பர் 21

3. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதியவர் ..............
   அ) ஈரோடு தமிழன்பன் ஆ) கால்டுவெல்
   இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

4. ‘வந்தான் மன்னன்’ என்பது ..................
   அ) எழுவாய் தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர்
   இ) வேற்றுமைத் தொடர் ஈ) செய்வினை

5. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்க.** (3 × 2 = 6)

6. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
7. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
8. தன்வினை, பிறவினை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
9. வீணையோடு வந்தாள். கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.
10. தூது இலக்கியம் பற்றி குறிப்பு வரைக.

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து வரிகளில் விடையளி.** (2 × 3 = 6)

11. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
12. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் – உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.
13. தூது அனுப்பத் தமிழே சிறந்தது – தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.
14. திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் யாவை? சான்று தருக.

**IV. விடையளிக்க.** (1 × 8 = 8)

15. உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின், ‘கால்முளைத்த கதைகள்’ என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

வளரும் செல்வம் – கதைச் சுருக்கம்.

☆ ☆ ☆

அமுதென்று பேர்

www.surabooks.com